185

# ஐக்கிய அரசு.

மலர்-1 இதழ்-8

ஆகஸ்டு-1934

JL
VINm,N34Ik.
N34.1.8.
48721.

776

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS' LEAGUE

மலர் 1. ஆகஸ்டு. இதழ் 8.

(185)

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மத்திய பாங்குகளும் டவுன்செண்ட் கமிட்டியார் சிபார்சுகளும்... ... | 1 |
| 2. | ஐக்கிய அயர்லாந்து ... ... | 5 |
| 3. | இந்திய மாதரும் கூட்டுறவு இயக்கமும் ... ... | 13 |
| 4. | கூட்டுறவு இயக்கமும் தேச முன்னேற்றமும் ... ... | 16 |
| 5. | அஷ்ட திக்கு ... ... | 17 |


காரியாலயம் :

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சிறப்பள்ளி.

1934

“ஐக்கிய அரசு”

போஷகர் :

டாக்டர் ஏ. மதுரம், புத்தூர், திருச்சி.

சங்கத் தலைவர் :

ஸி. பாசுதேவ், B.A., B.L., M.L.C.,

சோம்ஸ் ரோட், எழும்பூர், சென்னை.

காரியதரிசி :

டி. பி. குருசாமி பிள்ளை,

13, தென்னூர் ரோட், புத்தூர், திருச்சி.

கௌரவ ஆசிரியர் :

எஸ். ஜே. ரெத்தினசாமி, M.A., B.L., வக்கீல்,

பட்டர் ஒர்த் ரோட், தெப்பக்குளம், திருச்சி.

நிர்வாக ஆசிரியர் :

என். எஸ். கோவிந்தசாமி,

மண்ணச்சநல்லூர், திருச்சிறுப்பள்ளி.



**சந்தா விபரம்**

| | |
|---|---|
| உள் நாடு வருடம் 1-க்கு | ரூ 5—0—0. |
| வெளி நாடு ,, | ரூ 6—0—0. |

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பிவரப்படும்.

**விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| 4 வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| 3 வது பக்கம் அட்டை | ரூ. 25—0—0. |
| சாதாரண விளம்பரம் பக்கமொன்று | ரூ. 20—0—0. |

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்பட மாட்டாது. விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.


## அறிவிப்பு

நமது காரியாலயத்திற்கு அனுப்பப்படும் கட்டுரைகள், கடிதங்கள், மணியார்டர்கள் முதலியனவற்றை என். எஸ். கோவிந்தசாமி, நிர்வாக ஆசிரியர், “ஐக்கிய அரசு” காரியாலயம், 29, கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம் திருச்சி, என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அங்ஙனம் தாமதமும், வீண் சிரமமும் ஏற்படுமென்பதை அறியவும்.




# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 ஆகஸ்டு திருச்சி


## மத்திய பாங்குகளும் டவுன்செண்ட் கமிட்டியார் சிபார்சுகளும்

மத்திய பாங்குகள் என்றால் என்ன? அவை வந்த விதம் யாது? மத்திய பாங்கிற்கும் பிரதமச் சங்கங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? தற்போதைய நிலை என்ன? என்பதை அறிய விரும்புவோர் நம் மாகாணத்தின் கூட்டுறவு இயக்க சரித்திரத்தை ஓர் முறை படித்தாக வேண்டும். சென்னை மாகாணத்தில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவு பாங்கு 1904-ளு ஆகஸ்ட்-மீ 30-உ பதிவு செய்யப்பட்டது. இந்த பாங்கு பதிவு செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப் பின்னர் தான் கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திரார் பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது ரிஜிஸ்திரார் காலஞ் சென்ற சர். பி. ராஜகோபாலாசாரியார் தமது புதிய பதவியை ஏற்கலானார். புதியதாக சிருஷ்டிக்கப்பட்ட பதவியை முதன்மையாகப் பெற்ற சர். பி. ராஜகோபாலாசாரியார் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றையும் தாமே நேரில் பார்வையிட்டு, சங்கங்கள் கேட்கும் கடனை நேரில் கொடுத்து, சங்கங்களைக் கண்காணித்து வரலானார். இவ்வாறிருக்க சங்கங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகலாயிற்று. 1907-ளு ஜூன்-மீ 30-உ 63 சங்கங்களும் அவற்றில் 6439 அங்கத்தினர்களும் இருந்தனர் 1912-ளு ஜூன்மீ 30உ 972 சங்கங்களும், அவற்றில் 66,156 அங்கத்தினர்களும் இருந்தனர். 1915-ளு ஜூன்-மீ 30-உ 1600 சங்கங்களும், அவற்றில் 118,726 அங்கத்தினர்களும் இருந்தனர். இம்மாதிரி அதிகரித்துள்ள 1600 சங்கங்களிலும் நடந்துள்ள லேவாதேவி ரூ. 142·01 லட்சமாகும். இவ்வாறு சங்கங்களுக்குத் தேவையான பணத்தை கூட்டுறவு இயக்க ஆரம்ப காலத்தில் சர்க்கார் கொடுத்து உதவி வந்தனர். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல சர்க்கார் பணம் கொடுப்பதை நிறுத்திக் கொண்டனர். கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருளுதவி புரியும் பொருட்டு சென்னை மத்திய கூட்டுறவு பாங்கு நிறுவப்பட்டது. இந்த பாங்கு 1905-ளு அக்டோபர்-மீ பதிவு செய்யப்பட்டது. சென்னை மாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதையே இப்பாங்கு தமது நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், 1909-ம் ஆண்டில் ஜில்லா மத்திய பாங்குகள் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்ற நிலைமை ஏற்பட்டது. அதன் பிரகாரம் அவ்வருஷத்தில் இரண்டு ஜில்லா மத்திய பாங்குகள் நிறுவப்பட்டன. 1915-ளு

ஜூன்-௴ 30-வுடன் ஜில்லா மத்திய பாங்கிகளின் எண்ணிக்கை 9 ஆயிற்று. தற்போது அநேகமாக ஜில்லாக்கள் தோறும் ஓர் மத்திய பாங்கு இருந்து வருகிறது. ஆனால், கிழக்குக் கோதாவரியில் நான்கு மத்திய பாங்குகளும், தஞ்சாவூர், கஞ்சம், கிருஷ்ணா ஆகிய ஜில்லாக்களில் ஜில்லா ஒன்றுக்கு இரண்டு மத்திய பாங்குகளும் இருக்கின்றன. மதுரை—ராமநாதபுரம் மத்திய பாங்கானது மதுரையிலும், ராமநாதபுரத்தின் ஓர் பகுதியிலும் வேலை செய்கிறது. கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய இரு ஜில்லாக்களுக்கும் ஒரே மத்திய பாங்குதான் இருக்கிறது. இந்த ஜில்லா மத்திய பாங்குகள் யாவும் சென்னை மத்திய கூட்டுறவு பாங்குடன் இணைக்கப்பட்டன. மாக்ளீன் கமிட்டியார் செய்த சிபார்சின்படி 1917-௵ ஏப்ரல்-௴ முதல் "சென்னை மத்திய பாங்கு" என்பது சென்னை மாகாண கூட்டுறவு பாங்கு என வழங்கலாயிற்று. மாகாண பாங்கிற்கும், பிரதமச் சங்கங்களுக்கும் இடையேயுள்ள பாங்குகள் மத்திய பாங்குகளாயின. இம்மாதிரியான மத்திய பாங்குகளில் திருச்சி, சேலம் ஆகிய இரு ஜில்லாக்களிலும் தனித்த நபர்கள் பங்காளர்களாக இருந்தனர். அதிலும், திருச்சி ஜில்லா மத்திய பாங்கில் ஓர் பங்காளருக்கு அவரது பங்கின் எண்ணிக்கைக்குத் தக்கபடி அதிகமான ஓட்டுரிமை உண்டு என்றகொள்கை, (கூட்டுறவு தத்துவத்திற்கு விரோதமாக இருந்தாலும்,) பாங்கின் விதியில் ஒன்றாகக் கொள்ளப்பட்டு அமுலில் இருந்து வந்தது. ஆனால், நாளா வட்டத்தில் இவ்விரு பாங்குகளிலும் மாறுதல் ஏற்படலாயிற்று. பிரதம சங்கத்தாரை பங்காளராகக் கொள்வதென்பதை இரு பாங்குகளும் ஒப்புக்கொண்டன. ஒரு பங்காளர் அவரது பங்கின் எண்ணிக்கையைப் பொறுத்து ஓட்டுரிமையைப் பிரயோகிப்பதென்ற பழக்கத்தை விட்டொழித்து ஒரு நபருக்கு ஒரு ஓட்டுதான உண்டு என்ற கொள்கையை திருச்சி மத்தியபாங்கும் ஏற்கமுற்பட்டது. மத்திய பாங்குகளில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கும் பிரதம சங்கங்கள் செலுத்தியுள்ள பங்குத்தொகை பெரும்பாலும் தனி நபர்களால் செலுத்தப்பட்டிருக்கும் பங்கு மூலதனத்தைக் காட்டிலும் அதிகமாகலாயிற்று. மேலும், தனி நபர்களாயுள்ள பங்குக்காரர்களின் சங்கியை பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கும் சங்கங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாகவும் இல்லை. இத்துடன், புதிய சங்கங்கள் பங்குகள் எடுத்துக்கொண்டு வரவர தனித்த நபர்களாயுள்ள பங்குக்காரர்களின் எண்ணிக்கை நாளாவட்டத்தில் குறைந்து வரலாயிற்று. இம்மாதிரியாக மத்திய பாங்கில் இரு சாரார் பங்காளராக நேரிட்டதால் நிர்வாக சபை அமைப்பில் சிக்கலான பிரசினை எழலாயிற்று. மத்திய பாங்குகள் நிறுவப்பட்ட காலத்தில் அவை சென்னை மாகாண கூட்டுறவு பாங்கின் அமைப்பு முறையைப் பின்பற்றி நிறுவப்பட்டதாகையாலும், ஆரம்ப காலத்தில் தனித்த பங்காளரே இருந்தமையாலும் எத்தகைய போராட்டத்திற்கும் இடமில்லாதிருந்தது. ஆனால், சங்கங்கள் மத்திய பாங்குகளில் பங்கு எடுக்க உரிமை பெற்றது முதல் சங்கங்களின் பங்குத்தொகை பெருகவும், அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கவும், தனித்த பங்காளர்கள் தங்கள் மனம்போல் நடக்க முடியாது போயிற்று. மத்திய பாங்கின் நிர்வாக சபையில் ஆரம்ப காலத்தில் தனித்த பங்காளர்களே நிறைந்திருந்தனர். பிரதம சங்கத்தார் பாங்கில் பங்காளர்களாகவே நிர்வாக சபையில் அவர்களுக்கு ஸ்தானமளிக்க நேரிட்டது. இவ்வாறு ஸ்தானங்கள் வழங்குகிற விஷயத்தில் தனித்த பங்காளர்கள் தங்களது பங்குத்தொகையின் பாதுகாப்பை உத்தேசித்து விசேஷ பிரதிநிதித்துவம் வேண்டுமென்றனர். பிரதம சங்கத்தார் பாங்கின் அபிவிருத்தித் துறையில் தாங்கள் வகித்து வரும் முதன்மையான ஸ்தானத்தையும், தங்களது சங்கியையும் பொறுத்து தங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வேண்டுமென்று போராடலாயினர். கூட்டுறவு இயக்கத்தின் நிலைமையைக் குறித்து பரிசீலனை செய்யுமாறு 1915-௵ நியமிக்கப்பட்ட மாக்ளீன் கமிட்டி

14873



யார் இது சம்பந்தமாக செய்துள்ள சிபார்சு தனித்த பங்காளருக்கு இடி விழுந்தது போலாகி விட்டது. "தனித்த பங்காளர்கள் மத்திய பாங்குகளிலிருந்து அடியோடு நீக்கப்படவேண்டும். பிரதம சங்கங்களே பங்காளராக இருக்க வேண்டும். பாங்கின் நிர்வாகம் பிரதம சங்கத்தார் வசமிருக்க வேண்டும்" என்பது மாக்ளீன் கமிட்டியார் சிபார்சின் சாரமாகும். இவ்வாறு இக்கமிட்டியார் சிபார்சு செய்ததின் நோக்கம் கவனிக்கத்தக்கது. மத்திய பாங்கில் தனித்த பாங்காளர், பிரதம சங்கத்தார் ஆகிய இரு சாரார்கள் பங்காளர்களாக இருக்கும் வரையில், நிர்வாக சபையில் இரு சாராரும் பிரதிநிதிகளாக இருக்க நேரிடும்; இவ்விரு சாராரும் நிர்வாக சபையில் அங்கத்தினர்களாக இருப்பார்களாகில், அபிப்ராய பேதங்களும், விருப்பு, வெறுப்புகளும், கட்சிப் பிரதி கட்சிகளும், சண்டை சச்சரவுகளும் ஏற்படவும், அதனால் பாங்கின் நிர்வாகம் கெடவும் நேரிடும். இம்மாதிரியான நிலைமை ஏற்படுவதைத் தடுக்க பாங்கினை இருவரில் ஒருவர் வசம் ஒப்பிப்பதே மேலாகும். அந்த முறையில் மத்திய கூட்டுறவு பாங்கினுக்கு இன்றியமையாதவர்களாக உள்ளோர் தனித்த பங்காளர்களா? பிரதம சங்கத்தார்களா? என்று பார்த்தால் பின்னவர்தான் என்பது தெரியவரும். தனித்த பங்காளரின்றியாவது பாங்கு நடைபெறும். ஆனால், பிரதம சங்கத்தாரின்றி பாங்கினை நடத்துதல் முடியாது. ஏனெனில், மத்திய பாங்கு பிரதம சங்கங்களின் உதவிக்காக ஏற்பட்டதேயன்றி தனித்த பங்காளர்களின் நலத்தின் பொருட்டு அன்று. இவற்றினை எல்லாம் நன்கு பரிசீலனை செய்த பின்னரே மாக்ளீன் கமிட்டியார் தனித்த பங்காளர்களை மத்திய பாங்கிலிருந்து நீக்கி விடுவதே உசிதமென் சிபார்சு செய்துள்ளனர். ஆனால் அவர்களது சிபார்சுகளை கிரியாம்சத்தில் கொண்டு வர எங்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்நிலையில் மத்திய பாங்குகளில் பிரதம சங்கத்தார்-தனித்தபங்காளர் தகராறு நாளுக்குநாள் அதிகரித்து வரலாயிற்று. இங்ஙனமிருக்க, சென்னை மாகாணத்தில் கூட்டுறவு இயக்க நிலையைப் பரிசீலனை செய்ய 1927-௵ டவுன் செண்ட் கமிட்டி நியமிக்கப்பட்டது. இக்கமிட்டியில் பிரபல கூட்டுறவாளர்களான திரு. வி. ராமதாஸ் பந்துலு, ராவ்பகதூர் ராமலிங்கம் செட்டியார், இந்திய ஊழிய சங்கத் தலைவர் திரு. ஜி. கே. தேவதார், காலஞ்சென்ற திரு. கெ. டி. பால் ஆகியோர் அங்கத்தினர்களாக இருந்தனர். இக்கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகள் பலவற்றினும் மத்திய பாங்கின் அமைப்பு குறித்து குறிப்பிட்டுள்ளது மிகவும் போற்றத்தக்கது. மாக்ளீன் கமிட்டியார் சிபார்சைக் கண்டு திகிலடைந்துள்ள தனித்த பங்காளருக்கு இக்கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகள் ஓர் அளவு திருப்தியை அளிக்கக்கூடுமெனலாம். டவுன் செண்ட் கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகள் பின்வருமாறு:—

"மத்திய பாங்குகளின் ஆரம்ப தசையில் அவைகளின் மூலதனம் முழுதும் தனிப்பங்காளருக்குச் சொந்தமாயிருந்தது. பிறகு அவைகளுடன் சேர்க்கப்பட்ட சங்கங்கள் பங்குகள் பெறுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டதுமல்லாமல் புதிய பங்குகள் எதையும் தனி நபர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்னும் கொள்கையும் விசேஷமாய் அனுசரிக்கப்பட்டு வந்தது. மத்திய பாங்குகளின் தற்காலத்திய அமைப்பின் படி மகா சபையில், அதனுடன் சேர்க்கப்பட்டிருக்கும், சங்கங்களின்பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று நிபந்தனை கண்டிருக்கிறது. நிர்வாக சபையில் மேற்பார்வையிடும் ஒவ்வொரு யூனியனுக்கும் ஒரு பிரதி நிதியும், தனிப் பங்குக்காரர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சங்கியையுள்ள பிரதி நிதிகளும் இருக்கிறார்கள். இதனால் புது யூனியன்கள் ஏற்பட ஏற்பட பிரதி நிதிகளின் சங்கியையும் அதிகப்பட்டுக்கொண்டு போகிறது. மேலும், தனிப்பங்குக் காரர்களின் பிரதிநிதிகளுக்கும் யூனியன்களின் பிரதிநிதிகளுக்கும் உள்ள வீதாசாரமானது இடைவிடாமல் குறைந்துகொண்டு போகிறது. அல்லாமலும் பல இடங்களில் நிர்வாக சபையானது ஏற்கனவே நிர்வகிக்கக்கூடாத அளவுக்குப் பெருத்துப் போயிருக்கிறது. ஆகவே, மேற்படி சபையில் 21 அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கக் கூடாதென்றும், இரண்டுக்கு ஒன்று என்னும் சங்கியா பரிமாணப்படி அவர்களில் 14 பேர் யூனியன்களின் பிரதி நிதிகளாக இருக்கவேண்டுமென்றும், 7 பேர் தனி நபர்களின் பிரதி நிதி

களாயிருக்க வேண்டுமென்றும் சிபார்சு செய்கிறோம். மத்தியபாங்குகள் எல்லாம் இந்த சங்கியா பரிமாணப்படியே தங்களுடைய நிர்வாக சபையை அமைத்துக்கொள்ள வேண்டும். அனுஷ்டான ரீதியாய் பார்க்கும்போது தனிப் பங்குக்காரர்கள் அனேகமாய் பட்டணங்களிலும், யூனியன் பிரதிநிதிகள் கிராமங்களிலும் வாசஞ் செய்வதால், தனிப் பங்குக்காரர்களுக்கு அவர்களுடைய சங்கியைக்குப் பொருந்தாத அதிகாரம் இருந்துவருகிறது. மேலும், நிர்வாக சபையில் தனி நபர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரதிநிதிகளை மகாஜன சபையைச் சேர்ந்த யூனியன்களும், தனி நபர்களும் கூட்டாய்த் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். இந்தப்படி செய்கிற பட்சத்தில் இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக சிநேக பாவத்துடன் வேலை நடப்பதற்கு இடம் உண்டாகுமென்று நாங்கள் அபிப்ராயப்படுகிறோம். நிர்வாக சபையிலுள்ள யூனியன் பிரதிநிதிகளின் விஷயத்தில் ஒவ்வொரு ஜில்லாவையும் பிரதேசங்களாகப் பிரிக்கவேண்டு மென்றும், ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள யூனியன்களின் அங்கத்தினர்கள் இரண்டு வருஷத்திற்கு ஒரு முறை பொதுவான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும் நாங்கள் சிபார்சு செய்கிறோம்.''

மேற்கண்டவாறு டவுன்செண்ட் கமிட்டியார் சிபார்சுகள் மாக்லீன் கமிட்டியாரது சிபார்சுகளைப் போன்று தனித்த பங்காளர்களை மத்திய பங்குகளிலிருந்து அறவே ஒழிக்க வேண்டுமென இல்லாவிட்டாலும் அவர்கள் எந்த நோக்கத்துடன் அந்த சிபார்சுகளைச் செய்தனரோ அந்நோக்கத்தை பூர்த்தி செய்வதாகவே இருக்கிறது. தனித்த பங்காளர்கள் மத்திய பாங்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்பது மாக்லீன் கமிட்டியார் சிபார்சு; தனித்த பங்காளர்களை அவ்வாறு வெளியேற்றுவது உசிதமல்லவென்பது டவுன்செண்ட் கமிட்டியார் அபிப்ராயம். ஆனால், பிரதம சங்கத்தார் தங்களது பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமென்றும், தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளை தனித்த பங்காளர்கள், பிரதம சங்கத்தார் ஆகியோர் அடங்கிய மகாஜன சபைக்கூட்டம் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் டவுன்செண்ட் கமிட்டியார் கூறுகின்றனர். இம்மாதிரியான யோசனை தனித்த பங்காளருக்கு பாங்கில் ஸ்தானமில்லாது போகுமோ என்ற அச்சத்தை ஒழித்தாலும் அவர்களது ஏதேச்சாதிகாரத்திற்கு சாவுமணி அடித்துள்ளதெனலாம். ஏனெனில், இக்கமிட்டியார் சிபார்சுகள் அமுலுக்கு வரின் பிரதம சங்கத்தார் தங்களது பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமை பெறுவதுடன், தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்கும்உரிமையையும் பெறுகின்றனர். இதனால் பிரதம சங்கத்தாரின் நல்லெண்ணத்தைப் பெறாத தனி நபர் எவரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இதன் பயனாக, மத்திய பாங்கில் தனித்த பங்காளர்கள் இருப்பினும் நிர்வாக சபையில் பிரதிநிதிகளாக வரக்கூடியோர் பிரதம சங்கத்தாரின் ஆதரவைப் பெற்றவர்களாக இருக்கக்கூடுமாகையால் அவர்கள் சங்கப்பிரதிநிதிகளுடன் நேசப்பான்மையுடன் ஒத்துழைப்பார்களென்பது திண்ணம். இதன் பயனாக பாங்கின் நிர்வாக சபையில் அபிப்ராய பேதம் ஏற்பட வழியே இல்லை. டவுன்செண்ட் கமிட்டியாரின் சிபார்சுப்படி கோயம்புத்தூர் ஜில்லா கூட்டுறவு பாங்கு நிர்வாக சபை அமைக்கப்பட்டிருப்பதாகவும், பாங்கின் வேலை செம்மையாக நடைபெறுவதாகவும் தெரிகிறது. இக்கமிட்டியாரின் சிபார்சின்படி பிரதம சங்கத்தார் தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கிறார்களேயன்றி, தனித்த பங்காளர்கள் பிரதம சங்கத்தாரின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெறுவதற்கில்லை. அவ்வுரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும். தனித்த பங்காளர்கள் பாங்கிலிருக்கும் வரையில் உண்மையான கூட்டுறவு ஏற்பட வேண்டுமாகில் தனித்த பங்காளர்களின் பிரதிநிதிகளாயினும் சரி, பிரதம சங்கத்தாரின் பிரதிநிதிகளாயினும் சரி, தனித்த பங்காளரும், பிரதம சங்கத்தாரும் நிறைந்த மகாஜன சபைக் கூட்டத்தில் ஏக காலத்தில் தேர்ந்தெடுப்பதே மேலென்போம். இம்முறையினால், இரு சாராரது பிரதிநிதிகளையும் இரு சாராரின் விருப்பத்தின்படி தேர்ந்தெடுக்க முடிகிறது. இதனால் பரஸ்பர நட்பும், சமரசமும், கூட்டுறவும் உண்டாகிறது. இம்முறையை ஏற்க திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கு முன் வருமா?



# ஐக்கிய அயர்லாந்து

## II

அயர்லாந்தின் கூட்டுறவு இயக்கத்தில் பிரதானமானவை கிரிமெரிகள் எனப்படும் பாற்கட்டி, வெண்ணை முதலியதை உற்பத்தி செய்யும் ஸ்தலங்கள். இவைகள் இங்கிலாந்தில் வியாபாரம் செய்கின்றன. கால்நடை முதலிய பிராணிகளுக்கு அடுத்தபடி அயர்லாந்தில் உற்பத்தி வெண்ணையே. இந்த வெண்ணை உற்பத்தித் தொழிலே பலருக்கு ஜீவனம். ஆரம்பத்தில் கூட்டுறவு இயக்கம் முதல் முதல் இங்கிலாந்தில் பரவும்போது தொழில் திறமையிலும், வியாபார ஏற்பாடுகளிலும் சிறப்புற்ற வேறு நாடுகளின் போட்டியால் இந்த பிராணாதாரமான தொழில் மிகவும் தளர்ச்சி அடைந்து கொண்டிருந்தது. அயர்லாந்தின் கிருஷிகளுக்கு காலநிலையின் அனுகூலமும், பூமியின் செழிப்பும், சரக்குகளை ஏராளமாய் கொள்வினை செய்யும் இங்கிலாந்து சமீபத்தில் இருந்தும், டென்மார்க்குக் காரரும் பிரஞ்சுக்காரரும் இவர்களை இங்கிலாந்தின் வியாபார ஸ்தலங்களிலிருந்து விரட்டி விட்டார்கள். வியாபார ஸ்தலங்களில் ஏதாவது வெண்ணையை மிக இகழ்ந்து பேசவேண்டுமாயின் அதை ''அயர்லாந்து வெண்ணை'' என்று சொல்வது வழக்கமாயிற்று. அதில் பலதினசு கலந்திருக்கும். ஒரே கட்டியில் ஒவ்வோர் பாகம் ஒவ்வோர் தினுசாயிருக்கும். வெகு நாள் வைத்திருப்பதற்கு யோக்யதை உள்ளதாயிருக்காது. அழுக்கு நிறைந்திருக்கும். அதை பொட்டலம் கட்டியிருக்கும் முறையும் திறமையற்றது. இந்த நிலைமையால் இந்தக் கைத்தொழில் நசித்தே போகுமென்று தோன்றியது. அயர்லாந்தில் வெண்ணை வியாபாரத்திற்கு வழி இல்லாது போகுமென்றும், கால்நடைகளை மேய்த்து அயல் நாடுகளில் விற்பதைத்தவிர வேறொரு தொழிலுமில்லாது போகுமென்றும் தோன்றியது. இந்த நெருக்கடியான நிலையில் தேசாபிமானிகள் அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கத்தைப் புகுத்தியதின் மூலம் கிருஷிகளைக் காப்பாற்றினார்கள். இவர்கள் முதல் முதலாக வெண்ணைச் சாலைகள் மீது கவனம் செலுத்தி அந்தத் தொழில் முறையிலும், வியாபார முறைகளிலும் உத்தமமான ஏற்பாடுகள் செய்தனர்.

### வெண்ணைச் சாலைகள்

1890-ம் வருஷத்தில் சர். ஹோரஸ் ப்ளங்கெட் வேலைப் பொறுப்பேற்றுக்கொண்ட உடனேயே திரு. ஆண்டர்சன் என்பவர் டென்மார்க்கு, ஸ்வீடன் என்ற தேசங்களிலுள்ள பாற்கட்டி, வெண்ணை முதலியன உற்பத்தி செய்யும் முறைகளை ஆராய்ந்து அறிவதற்காக அந்தத் தேசங்களுக்குச் சென்றார். அவ்வாறு ஆராய்ந்ததின் பயனாக டென்மார்க்கிலுள்ள கிருஷிகள் உயர்ந்த யந்திரங்களை திறமையுடன் உபயோகிப்பதாலும், வியாபார முறையில் ஒற்றுமை பொருந்திய பல ஏற்பாடுகளாலும், ஆச்சரியகரமான லாபமடைவதாய் தெரிவித்தார். ஆகவே, அயர்லாந்தில் ஆங்காங்கு உள்ளவர்கள் தத்தம் இஷ்டம்போல் நினைத்தபோதெல்லாம் கைமத்தை உபயோகித்து சிறிது சிறிதாய் வெண்ணை எடுக்கும் அக்காலமுறையை விட்டு தற்காலத்திய உயர்ந்த யந்திரசாலைகளை ஸ்தாபித்து அவை மூலம் வெண்ணை எடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யவேண்டியது அத்தியாவசியமென்பது தெளிவாயிற்று. இதற்கு கிருஷிகள் அனைவரும் ஒற்றுமையாய்கூடி தேவையான பணத்திற்கும் பொருள் உற்பத்திக்கும் ஜவாப்தாரிகளாக வேண்டியது அவசியமாயிற்று. ஆனால் அக்காலத்தில் அயர்லாந்தின் கிருஷிகள் இருந்த நிலைமையை அறிந்தவர்களுக்கு அவர்களை இவ்வாறு ஒன்று சேரச் செய்வது சிறிதும் முடியாத காரியம் என்று தோன்றியது. ஆயினும், மேற்கண்ட தேசாபிமானிகள் மனமகிழ்ச்சியுடன் இவ்வேலையை ஏற்றனர்.

மிகக் கஷ்டத்துடன் 50 கூட்டங்கள் கூடிய பிறகு முதலாவது வெண்ணைசாலை ஸ்தாபிக்கப்பட்டது. சில கூட்டங்களில் கிராமப் பாடசாலை உபாத்தியாயர் மாத்திரம் தான் ஆஜராயிருப்பார். இவ்வாறு இயக்க ஆரம்பத்தில் ஆதியில் என்

னன்ன நிபந்தனைகளுடன் ஆரம்பித்தார்களோ அதே நிபந்தனைகளை இன்னும் விசேஷ மாறுபாடுகளின்றி வழங்கி வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது. அதாவது முதலுக்கு வட்டியும், லாபத்தை வியாபாரம் செய்த தொகைப்படிக்கு விகிதத்துக்கொடுப்பதுமாகும். வெண்ணைச் சாலைக்கு பால் சேர்ப்பிக்கவேண்டிய ஒவ்வொரு பசுவுக்கும் ஒரு பவுன் பெறுமானமுள்ள ஒவ்வொரு பங்கை ஒவ்வொரு அங்கத்தினரும் எடுத்துக்கொண்டனர். அந்த வகையில் 8-ல் ஒரு பங்கு பணம் ஆரம்பத்தில் செலுத்தப்பட்டது. வெண்ணைச் சாலை கட்டிடம், யந்திரங்கள் முதலியவற்றிற்கு வேண்டிய பணம் வாங்குவதற்கு ஆதாரமாக மீதமுள்ள பங்குப்பணம் பொறுப்பாக கூட்டுறவு முறை பரவவே அயர்லாந்திலுள்ள பாங்கிகள் யாவும் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்குத் தனித்தனியாகவும், சேர்ந்தும், பொறுப்பு தாரர்களாயுள்ள சங்கங்களுக்கு வருஷம் 1-க்கு 100-க்கு 4 விகிதம் வட்டிக்குப் பணம் கொடுக்க சம்மதித்தன. ஆனால் ஆரம்பத்தில் பண உதவி பெறுவது மிக சிரமமாய் இருந்தது.

பாலுக்கு விலை கொடுக்கும் முறை காலத்திற்குக்காலம் சிறிதுமாறியது. ஆயினும், இப்போது வழங்கிவரும் முறையே நிலைபெற்றது. அதாவது பாலைக் குடியானவர்களே நேரில் வெண்ணைச் சாலைகளுக்குக்கொண்டு வருகிறார்கள். வந்ததும் உடனே நிறுக்கிறார்கள். சில இடங்களில் பாலைக்கொண்டு வருவதற்கு வெண்ணைச் சாலைகளே வண்டிகள் ஏற்பாடு செய்கின்றன. பாலை நிறுத்ததும் அதை பால் கொண்டு வந்தவர் கணக்கில் வரவு வைக்கப்படும். அப்பொழுதே அந்தப் பாலில் எவ்வளவு வெண்ணை இருக்கக்கூடுமென்று சிறிது பாலை எடுத்து பரிசோதித்துப் பார்ப்பார்கள். ஏனெனில் பாலில் உள்ள ஜலத்திற்கு விலை இல்லை. அந்தப் பாலில் உள்ள வெண்ணைக்குத்தான் விலை. மாதக்கடைசியில் கமிட்டியார் கூடி அந்த மாதத்தில் ஒரு பவுண்டு நிறை வெண்ணைக்கு எவ்வளவு விலை கொடுக்கலாம் என்று தீர்மானிப்பார்கள். பிறகு அந்தத் திட்டப்படி பால் கொடுத்தவர் ஒவ்வொருவருக்கும் அவர்கள் பாலில் உள்ள வெண்ணை நிறைக்குத் தக்கபடி பணம் அனுப்புவார்கள். வருஷக்கடைசியில் நடப்புச் செலவுகள் போக மீதி இருந்தால் அதையும் பால் கொடுப்பவருக்கு வெண்ணை நிறைப்படியே விகிதத்துக் கொடுப்பார்கள். இவ்விதமாகக் குடியானவன் தன் பாலின் பூரா விலையையும் அடைகிறான். வெண்ணை எடுத்தபால் பன்றிகளுக்கு மிக உபயோகமான உணவு. ஆகவே, பால் வந்ததும் யந்திரத்தின்மூலம் வெண்ணையைப் பிரித்தெடுத்து மீதிப்பாலை கொண்டு வந்த குடியானவனுக்குத் திரும்பக் கொடுத்து விடுவார்கள். ஆகவே, கூட்டுறவு வெண்ணைச்சாலைகளுக்கு பால் கொடுப்பவருக்கு வெண்ணைக்கு விலையும் கிடைக்கிறது; வெண்ணை எடுக்கப்பட்ட பாலும் கிடைக்கிறது. இப்படித் தனி பாத்தியமுள்ள தனி முதலாளிகளுடன் வியாபாரம் செய்யும் கிருஷிகளுக்குப் பால் திரும்பக் கிடைக்காது. ஆனால் இந்த வெண்ணைச் சாலைகள் மிகுந்த லாபமடைய முயலுவதில்லை. வேலை நடத்தும் செலவு, யந்திரங்களின் தேய்வு, ரிசர்வ் பண்டு, இவைகளுக்கு வேண்டிய அவசியமான பணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு மீதியை எல்லாம் பாலுக்கு விலையாகக்கொடுத்து விடுகிறார்கள். உதாரணமாக "லிமெரிக்" என்ற ஜில்லாவில் மொத்தம் 54 சங்கங்கள். இவைகளின் மொத்த வியாபாரம் 108312 பவுன் செலவு போக மீந்த லாபம் 11,843 பவுன். அதாவது 100-க்கு 1·17 வீதமே வெண்ணைச் சாலையில் லாபம் வைத்துக்கொள்ளப்பட்டது. அவ்வாறே மோனகன் என்ற ஜில்லாவில் 19 வெண்ணைச் சாலைகள் 100-க்கு 1·34 தான் லாபம் வைத்துக்கொண்டன.

அயர்லாந்து விவசாயச் சங்கத்தார் ஓர் இடத்தில் வெண்ணைச்சாலை ஸ்தாபிக்கவேண்டுமாயின் அங்கிருந்து 5 அல்லது 6 மைல் சுற்றளவுக்கு 800-க்குக் குறையாமல் 1200 வரை பசுக்கள் பால் தரக்கூடுமாயின் வெண்ணைச் சாலைகள் ஏற்படுத்துகின்றனர். பசுக்கள் அவ்வளவு சமீபத்தில் நெருக்கமாயின்றி தூரமான ஊர்களில் பரந்து இருக்குமிடங்களில் பிரதம வெண்ணைச்சாலை ஒன்றும், ஆங்காங்கு அதற்குக் கிளை ஸ்தாபனங்களும் ஏற்படுத்துகிறார்கள். இவை ஆங்காங்கு வரும் பால்களிலிருந்து வெண்ணையைப் பிரித்தெடுத்து பிரதம வெண்ணைச் சாலைக்கு அனுப்புகின்றன. அங்குதான் சுத்தஞ்



செய்தல், பொட்டலம் கட்டல், ஏற்றுமதி செய்தல் முதலிய வேலைகள் நடைபெறும். இம்மாதிரி யந்திரங்களுடன் உள்ள வெண்ணைச் சாலைகள் ஏற்படுத்த 2000 பவுன் முதல் 2400 பவுன் வரை செலவாகும். 1890-ம் வருஷத்தில் வெண்ணைச் சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டது முதல் பால் கட்டி, வெண்ணை முதலியன உற்பத்தி செய்யும் தொழில் மிக மேன்மையாய் விட்டது. கிருஷிகளை ஒற்றுமைப்படுத்தி வியாபார முறைகளைப் போதிப்பதுமின்றி அயர்லாந்து விவசாய ஊழிய சங்கத்தார் கிருஷிகளுக்கு வெண்ணை உற்பத்தியால் மிகுந்த சாஸ்திர ஆராய்ச்சியும், அனுபவமும் உள்ளவரான திரு. ஜேம்ஸ் ப்லாண்டு என்பவர் வெண்ணைச் சாலைகளுக்குக் கட்டிட அமைப்பு, யந்திரங்கள் நிறுவுதல், வெண்ணை செய்யும் உத்தம சாஸ்திர முறை இவை எல்லாம் போதிக்கும் உத்தியோகத்தில் நியமிக்கப்பட்டார். இவருடைய ஊக்கத்தினால் மிக நன்மையும், அபிவிருத்தியும் ஏற்பட்டன. இதுகாலை டென்மார்க்கிலுள்ள பிரதம வெண்ணைச் சாலைகளுக்குச் சமமான நிலையில் இருக்கின்றன. வெண்ணை செய்யும் முறைகள் சாஸ்திர ஆராய்ச்சிகளுக்கும், சுகாதார முறைகளுக்கும் பூர்ணமாய் ஒத்திருக்கின்றன. பாலைக் கெட்டுப் போகாமல் வைப்பதற்கு அதனுடன் சில வஸ்துக்களைச் சேர்ப்பது போய் பாலைக்கெடுக்கும் நுண்ணிய கிருமிகளை நீக்குதல் என்ற முறை எங்கும் கையாளப்பட்டு வருகிறது. இவ்வாறு அசத்த ஜந்துக்களை நீக்கிய பால் வெகுகாலம் நிற்கும். ஆயினும், பாலின் குணத்திற்கு ஓர் திட்டம் ஏற்படுத்த பல சீர்திருத்தங்கள் வேண்டும்.

கிருஷிகளுக்குப் பசுக்களில் நல்லது எது? கெட்டது எது? என்பதை அறியும் சக்தி கிடையாது. ஆகவே, தங்கள் பசுக்கள் உயர்ந்த தரமாய் இருக்கவேண்டுமென்று அவர்கள் ஊக்கம் கொள்வதில்லை. இவ்விஷயத்தில் அவர்களுக்கு உணர்ச்சியையும், ஊக்கத்தையும் உண்டாக்குவதற்காக டென்மார்க் முதலிய தேசங்களில் இருப்பதுபோல் வெண்ணைச்சாலை அங்கத்தினர்களைக்கொண்டு பசுப்பரிசோதனை சங்கங்களை அயர்லாந்து விவசாயச் சங்கத்தார் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவ்வாறே விவசாய இலாக்காவும் முயற்சி செய்கிறதுடன் மேற்கண்ட சங்கங்களுக்கு வேண்டிய பணஉதவியும் செய்கிறது. தங்கள் பசுக்களால் தங்களுக்கு எவ்வளவு லாபம் அல்லது நஷ்டம் ஏற்படுகிறது என்று ஆராய்ந்தறியாத, இரு கிருஷி அங்கத்தினர்கள் தங்கள் பசுக்களைப்பற்றி அடியில் கண்ட விஷயங்களை ஓரிடத்தில் கண்டுபிடித்தார்கள். அதாவது, ஒருவனது உயர்தரமான பசு 19 பவுன் பெறும் பால் கொடுத்தது. கீழ்தரமான பசு 9 பவுன் பெறும் பால் கொடுத்தது. ஆயினும் அவ்விரண்டுக்கும் உணவுச் செலவு ஒன்றே. அவ்வாறே மற்றொரு கிருஷிகனது இரு பசுக்கள் ஒன்று போலவே உணவு தின்னும். ஒன்று 12 பவுன் பெறுமான பால் தந்தது; மற்றது 5 பவுன் பெறுமான பால் தந்தது. கூட்டுறவு வெண்ணைச் சாலைகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்கள் 2,5000. ஆகவே, இவைகள் தீனி நிறையத்தின்றும், பால் குறைவாகக் கொடுப்பவையைத் தள்ளி, அனைத்தையும் உயர்தரப் பசுக்களாக ஆக்கினால் கிருஷிகளுக்கு எவ்வளவு லாபம் உண்டாகும் என்பது தெளிவு. இப்பொழுது ஒரு பசு சராசரி வருஷத்திற்கு 350 அல்லது 400 காலன் பால் கொடுக்கிறது. மேலே சொன்னபடி பசுக்களை சோதித்தெடுத்தால் சராசரி 600 காலன் வரையில் விருத்தி செய்யலாம். விஷயங்களை இவ்வளவு தெளிவாய் எடுத்துக் காட்டியும் பசுப்பரிசோதனை சங்கங்களில் சேருவதற்கு கிருஷிகள் அதிகம் உற்சாகம் கொள்வதில்லை. இதற்குக் காரணம் விவசாய அபிவிருத்தி சங்கத்தாரும் சர்க்கார் இலாக்காவும் ஒத்துழையாமையேயாகும். இது காரணமாக அயர்லாந்திலுள்ள வெண்ணைச் சாலைகளில் வருடம் பூராவும் ஒரே அளவுக்கு நிதானமாய் வெண்ணை உற்பத்தி செய்ய முடியவில்லை. அயர்லாந்து வெண்ணை எவ்வளவோ சிறந்த தானாலும் இங்கிலாந்தில் விற்பனை செய்யுமிடங்களில் இதற்கு டென்மார்க்கு வெண்ணையைவிட குறைந்த விலைதான் கிடைக்கிறது. அயர்லாந்து வெண்ணை முதல் தரமானதென்றும், மற்றும் எந்த நாட்டு வெண்ணைக்கும் சற்றும் தாழ்ந்ததல்லவென்றும், யாவரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஏனைய நாடுகளைவிட அயர்லாந்து வியாபார ஸ்தலத்திற்கு மிக சமீபமாகவும் இருக்கிறது. இங்

நனமிருக்க, அயர்லாந்து வெண்ணெய்க்கு நல்ல விலை கிடைக்காதிருப்பது வியக்கத்தக்கது. இதற்கு முக்யமான காரணமொன்றுண்டு. அயர்லாந்தில் பசுவுக்கு உணவாக பூராவும் புல்மட்டுமே கொடுக்கிறார்கள். ஆகவே, அக்டோபர் மாதம் முதல் மே மாதம் வரை பனிக்கட்டியால் புற்கள் இல்லாமல் போனபோது பால் உற்பத்தி செய்வதில் ஓர்வித முயர்ச்சியும் செய்வதில்லை. வெண்ணெய்ச் சாலைகள் வெண்ணெய் உற்பத்தி செய்வதை நிறுத்தி முன் மாதங்களில் உற்பத்தி செய்த வெண்ணெயை விற்கும் வேலையை மட்டும்தான் செய்ய நேரிடுகிறது. இச்சமயத்தில் விற்பனை ஸ்தலத்தில் வியாபாரம் பூராவும் டென்மார்க்குக்காரர் கைக்குள் போய்விடுகிறது. ஏனெனில் அவர்கள் வருஷம் பூராவும் ஒரே நிதானமாய் இடைவிடாமல் வெண்ணெய் உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள். ஆகவே, மார்ச் மாதம் தோறும் அயர்லாந்துக்காரர் இழந்த வியாபாரத்தை திரும்பவும் கைப்பற்ற வேண்டி இருக்கிறது. இதற்குப் பரிகாரம் யாதெனில் பனிகாலத்திலும்கூட பசுக்களுக்குத் தகுந்த உணவு போட்டு வருஷம் பூராவும் இடைவிடாமல் பாலும், வெண்ணெயும் உற்பத்தி செய்ய வேண்டும். இதற்கென தரிசான நிலங்களை விவசாயத்திற் குரியதாகக் கொண்டுவரவேண்டும். மகாயுத்தத்திற்கு முன் அயர்லாந்தில் விவசாயத்திற்குத் தகுந்த மொத்த நிலங்களில் 100-க்கு 12 பங்கு, அதாவது அரைக்கால் பங்கு தான் பயிர் செய்யப்பட்டது. போதிய தொழிலாளர்கள் கிடைக்காமையாலும், இறக்குமதியாகும் பொருள்களால் விலை தாழ்ந்தமையாலும். காலநிலை ஸ்திரமற்றதாகையாலும், அயர்லாந்து கிருஷிகள் விவசாயத்தை அதிகரிக்க தைரிய மற்றவர்களாக இருந்தார்கள்.

நிற்க, அயர்லாந்து வெண்ணெய்ச் சாலைகள் சம்பந்தமாக கவனிக்கத்தக்க தொன்றுண்டு. கிருஷிகள் தங்கள் வெண்ணெயை விற்பனைக்குத் தகுதி செய்வதற்கும் தகுந்த விலைக்கு விற்பதற்கும் திறமையுள்ள தொழிலாளரின் உதவி கிடைக்கும்படி கிருஷிகளை கூட்டுறவு முறையால் கூட்டுவித்திருப்பது நமக்குத் தெரியும். இதனால் ஒவ்வொரு கிருஷிகனும் லாபமடைந்திருக்கிறான் என்பது தெளிவு. அயர்லாந்தின் வெண்ணெய் ஏற்றுமதி அபாரமாய் விருத்தி அடைந்திருப்பது வெண்ணெய்ச் சாலைகளினால் தான் என்று உறுதியாய்ச் சொல்லலாம். சுமார் 10 வருஷத்திற்கு முன்னமேயே கணக்கிட்டுப் பார்த்ததில் ஒரு பசுவின் வெண்ணெய்க்கு முன்னையைக் காட்டிலும் மூன்றில் ஒரு பங்கு அதிக விலை கிடைப்பதாகத் தெரிகிறது. 1895-ம் ஆண்டில் டிராலி என்ற இடத்தில் கூட்டுறவு வெண்ணெய்ச் சாலையைச் சேராத ஓர் கிருஷிகனது பாலுக்கு $2\frac{1}{2}$ பென்னி, 3 பென்னி, $3\frac{1}{2}$ பென்னி கிடைத்திருக்க அதே தரமான வெண்ணெய்ச் சாலை பாலுக்கு முறையே $2\frac{3}{4}$ பென்னி, $3\frac{1}{4}$ பென்னி, $3\frac{3}{4}$ பென்னி விகிதம் கிடைத்தது. அப்படியே 1896-ம் வருஷத்தில் 6 பென்னி, 7 பென்னி விகிதம் தனித்த நபர்களுக்குக் கிடைத்த தென்றால் வெண்ணெய்ச் சாலைகளில் 11 பென்னி கிடைக்கலாயிற்று.

வெண்ணெய்ச் சாலைகளுக்குப் பால் வருவதுடனாவது, அவ்வெண்ணெயை உத்தம முறையில் பிரித்து எடுத்து பக்குவப் படுத்துவதுடனாவது கூட்டுறவு வெண்ணெய் அபிவிருத்தி இயக்கத்தின் வேலை நின்றுவிட வில்லை. அந்த வெண்ணெயை தகுந்த இடத்தில் தகுந்த விலைக்கு விற்பனை செய்வதே முக்கியமான வேலையாகும். இது வெண்ணெய்ச்சாலை மானேஜரது பொறுப்பாகும். இத்துறையில் டென்மார்க்கைப் போன்று அயர்லாந்து முற்போக்கான நிலையை அடையவில்லை. டென்மார்க்கில் வெண்ணெய்ச் சாலைகளெல்லாம் ஓர் பெடரேஷனில் இணைக்கப்பட்டிருக்கின்றன. வியாபார சம்பந்தமான தகவல்கள் தெரிவதற்கு பரிபூரணமான ஏற்பாடுகள் செய்திருக்கின்றன. தேசம் பூராவுக்கும் ஒரே வியாபாரக் குறி உற்பத்தி செய்வதற்கும், விற்பனை புரிவதற்கும் எங்கும் ஒரே ஏற்பாடு. அயர்லாந்தில் இவ்வித ஒற்றுமை இல்லை, ஒவ்வொரு வெண்ணெய்ச் சாலையும், வெவ்வேறாக வியாபாரம் செய்து போட்டி செய்வதில் இவ்வாறு போட்டி போடுவதைவிட்டு ஓர் வியாபாரம் செய்யும் பெடரேஷனுக்க் கூடவேண்டுமென்பது தெளிவாயிற்று. ஆகவே, வெண்ணெயை விற்பனை செய்வதற்கும், அங்கத்தினர்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்குமாக அயர்லாந்து கூட்டுறவு ஏஜன்ஸி சங்கம் என்பது லிமரிக் நகரில் ஸ்தா



பிக்கப்பட்டது. அதற்கு இங்கிலாந்தில் மாஞ்செஸ்டர் நகரத்தில் ஓர் ஆபீசும், பல இடங்களில் ஏஜண்டுகளும் ஏற்படுத்தப்பட்டனர். இச்சங்கம் இன்றும் நடந்து வருகிறது. மிகுந்த வியாபாரம் செய்கிறது. சிறிது லாபமும் அடைகிறது. ஆனால், அயர்லாந்தின் வெண்ணெய் வியாபாரத்தின் பெரும் பாகம் இதன் மூலம் நடைபெறவில்லை. அயர்லாந்திலுள்ள வெண்ணெய்ச் சாலைகள் வெளியில் வெண்ணெய் விலையாகாத காலங்களில் எல்லா வெண்ணெயையும் ஏஜன்ஸி சங்கத்திற்கு அனுப்புவதும், வெண்ணெய் விலையாகும் காலங்களில் தாங்களே வெளியில் விற்று விடுவதுமான துர்வழக்கத்தை இன்னும் விடுவதில்லை. இது கூட்டுறவு இயக்கத்திற்கு முற்றும் விரோதமானது. ஆகவே, இவை அனுப்பாத காலங்களில் ஏஜன்ஸி சங்கத்தார் வெளி இடங்களில் வெண்ணெய் வாங்க நேரிடுகிறது. இதனால், ஏஜன்ஸி சங்கத்தார் வெண்ணெய்ச் சாலைகளின் பெடரேஷனாக இருப்பதற்குப் பதிலாக ஓர் தனி வியாபார சங்கமாகி விட்டது.

சென்ற சில வருஷங்களாக டென்மார்க் முறையை அனுசரித்து ஓர் புதிய ஏற்பாட்டால் ஐக்கிய விவசாயச் சங்கம் இவ்வித இடையூறுகளை வென்றுவிட முயற்சித்து வருகிறது. அதாவது, "அயர்லாந்து வெண்ணெய் கட்டுப்பாடு," என்பதாகும். இச்சபையாருக்குத்தனி வியாபாரக்குறி உண்டு. தாம் சொல்லும் கட்டுப்பாட்டுக்கு உறுதியாய் உட்படும் வெண்ணெய்ச் சாலைகளுக்குத்தான் இந்தக் குறியைக் கொடுக்கிறார்கள். அந்நிபந்தனைகளாவன:—பால் வியாதிக் கிருமிகளின்றி சுத்தஞ் செய்யப்பட வேண்டும். அது கெட்டுப்போகாமல் இருப்பதற்கென்று ஒரு பொருளும் அத்துடன் சேர்க்கக்கூடாது. அது பரிசுத்தமானதா என்று சாஸ்திர நிபுணர்களால் சோதிக்கப்படும். இவ்வாறு உற்பத்தியான வெண்ணெய் உலகிலுள்ள உத்தம வெண்ணெய்க்குச் சமமாக இருக்கிறது. தென் ஆப்ரிகாவில் கேப் டவுனிலிருந்தும், ஜெர்மனியிலிருந்தும், அதை உபயோகிப்போர் எழுதும் அத்தாக்ஷிகளிலிருந்து அயர்லாந்தின் கூட்டுறவு வெண்ணெய்ச் சாலைகளின் வெண்ணெய் எவ்வளவு உயர்வானதென்று தெரிகிறது. ஸ்பெயினுக்கு அனுப்பப்பட்ட ஒரு பாக்கெட் அங்கே விலாசத்தாரைக் காணாது திரும்பி வந்து அதன் பின்னும் சரியான விலையாயிற்று. அதுவரை அவ்வெண்ணெய் கெட்டுப்போகவில்லை. இவ்வாறு "அயர்லாந்து வெண்ணெய்க் கட்டுப்பாட்டு" முறையால் வெண்ணெயின் தரம் உயர்வதையும், அதன் தேவை அதிகரிப்பதையும் போதிய அளவு சகலரும் உணரவில்லை. மேலும், வெண்ணெய்ச் சாலைகள் யாவும் ஒரே குறியைக் கொள்ளுதல் என்ற முடிவுக்கு வர வேண்டும் அப்படியாயின் இங்கிலாந்தின் விற்பனை ஸ்தலங்களில் அதற்கு மேன்மை ஏற்படும். அயர்லாந்தின் வெண்ணெய்ச் சாலைகள் தற்சமயம் இவ்வுண்மையை நன்றாக உணரவில்லை. ஆனால் குறியை ஆதரித்த வெண்ணெய்ச் சாலைகள் நல்ல நிலைமை அடைந்திருக்கின்றன. இதுகண்டு மற்றவையும் சேரக்கூடும். வெண்ணெய்ச்சாலைகள் விஷயத்தில் மற்றோர் முக்கிய விஷயமும் உள்ளது. வெண்ணெய்ச் சாலைகள் முன்னேறவேண்டுமாயின் அதன் அங்கத்தினர்கள் அதைத் தவிர வேறு ஒருவருக்கும் பால் கொடுக்கக்கூடாது. ஆனால் சில இடங்களில் வெண்ணெய்ச் சாலைகளைக் கலைக்க வேண்டுமென்ற நோக்கமுடைய சிலர் வெண்ணெய்ச் சாலைகளின் அங்கத்தினர்களது பாலுக்கு வெண்ணெய்ச் சாலைகளைவிட அதிக விலை கொடுத்து ஒற்றுமையைக் கெடுக்க முயலுகிறார்கள். இதனை உத்தேசித்து வெண்ணெய்ச் சாலைகளைக் காப்பாற்றுவதற்காக ஓர் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு அங்கத்தினரும் தன் உபயோகத்துக்கு வேண்டியது போக, தன்னிடம் எஞ்சக்கூடிய பால் பூராவையும், வெண்ணெய்ச் சாலைகளுக்கு செலுத்தவேண்டியது. இவ்விதி செல்லத்தக்கதல்லவென நீதி ஸ்தலங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே. வேறுவிதமாய் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படவேண்டும். ஆனால், வெண்ணெய்ச் சாலைகள் அங்கத்தினர்களில்லாதவர்களிடமும் பால் வாங்குகின்றன. சில வெண்ணெய்ச் சாலைகள் அங்கத்தினர்களுக்கு வேண்டிய விவசாயப் பொருள்களை வாங்கிக்கொடுக்கின்றன. இதன் விலையைப் பால் விலையிலிருந்து கழித்துக் கொள்ளுகின்றன. சில வெண்ணெய்ச் சாலைகள் அங்கத்தினர்களது முட்டைகள், கோழிகள் முதலியதையும், விற்பனை செய்து கொடுக்கின்றன. சில வெண்ணெய்ச் சாலைகள் அங்கத்தினர்

களது கோதுமையை மாவாகத் திரிக்க யந்திரங்களை உபயோகிக்கின்றன. இது நாட்டுப் புறங்களில் உள்ளவர்களுக்கு மிக உதவியாய் இருக்கிறது. இதனால் விவசாயமும் விருத்தியாகக் கூடும். பணம் கையிலுள்ள சில வெண்ணெய்ச் சாலைகள் அங்கத்தினர்களுக்கு அதை வட்டிக்குக் கடனாகக் கொடுக்கின்றன. இம்முறை சிறந்ததென சொல்வதற்கில்லை.

## கூட்டுறவு விவசாயச் சங்கங்கள்

கூட்டுறவு விவசாயச் சங்கத்தின் நோக்கம் விவசாயத்திற்கு வேண்டிய உரம், கருவி, விதை முதலியவைகளை பலர் ஒற்றுமையாய் வாங்குவதும், விளையும் பொருளை விற்பனை செய்வதுமாகும். அயர்லாந்தில் கூட்டுறவு இயக்க ஆரம்பத்தில் இச்சங்கங்கள் இவ்வேலைகளுடன் கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் வேலையையும், அதற்காக தகுந்த எருதுகள், குதிரைகள், முதலியனவற்றை வாங்கும் வேலையையும் செய்து வந்தன. விவசாய இலாக்கா ஏற்படும்வரை இது மிக நன்மை செய்தது. விவசாய இலாக்கா ஏற்பட்டதும் கால்நடைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டி ஏற்பாடுகளை அதுவே செய்து வருகிறது. ஐரோப்பாவில் பல தேசங்களில், விசேஷமாக ஸ்விட்சர்லாந்தில் இவ்வாறு கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை அந்நாட்டு சர்க்காரே பூர்ணமாக ஏற்று நடத்துகின்றனர். ஆரம்பத்தில் விவசாயச் சங்கங்களின் வேலை தம் அங்கத்தினர்களுக்கு விதை, உரம், விவசாயக் கால்நடைகளுக்கு உணவு, ஆகியவற்றை வாங்குவதே யாகும். இதில் இரண்டு விதமாக லாபம் வந்தது. முன்னர் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டியதை சிறிது சிறிதாய் வெவ்வேறாக சில்லரையாய் வாங்கி வந்தனர். தற்பொழுது யாவரும்கூடி மொத்தமாக வாங்கியதால் இடையில் வாங்கி விற்றவர் அடைந்த லாபம் அங்கத்தினர்களைச் சேர்ந்தது. அத்துடன் முன்னைவிட உயர்ந்த தரத்தில், கலப்பின்றி சுத்தமான விதைகளும் கிடைத்தன.

கூட்டுறவு விவசாய சங்கங்கள் முதலில் ஐரிஷ் ஐக்கிய ஏஜன்ஸி சங்கத்தின் மூலம் தமக்கு வேண்டிய சாக்குகளை வாங்கின. ஆனால், 1897-ல் அயர்லாந்திலுள்ள கூட்டுறவு சங்கங்கள் யாவுக்குமாக மொத்தமாய் விலைக்கு வாங்குவதற்கு ஓர் கூட்டுறவு பெடரேஷன் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கம் அயர்லாந்து விவசாய மொத்த வியாபாரச் சங்கமெனப்படும். இதற்கு ஆரம்பத்தில் தேவையான முதல் இல்லை. இன்றும் முதல் இல்லாமை அதற்கு இடையூறாக இருக்கிறது. இது எல்லா விவசாய சங்கங்களுக்கும் வேண்டிய பொருள்களை மொத்தமாக வாங்குகிறது. இது ஆரம்பிக்கும்போது விவசாய சங்கங்கள் பத்துத்தான் இருந்தன. மறு வருஷத்தில் இவை 30 ஆயின. இவைகளுக்கு வேண்டிய விதைகளைப் பரிசோதித்து வாங்குவதற்கு அயர்லாந்தில் தகுந்த கருவிகள் கிடையாமல் அந்த விதைகளை ஸ்விட்சர்லாந்தில் ஸ்யூரிச் என்ற நகரத்தில் சோதித்துப் பார்த்து வாங்கினார்கள். விவசாய இலாக்கா ஏற்பட்டதும் விதைகள் கொடுப்பது அதன் வேலையாய் விட்டது. விதைகளை சோதிப்பதற்கு ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பும் அவசியம் நீங்கியது. 1897-ம் வருஷத்தில் மேற் சொன்ன மொத்த வியாபாரச் சங்கம் ஸ்தாபிக்கப்படுமுன் ஓர் முக்கிய சம்பவம் நடந்தது. அதுசமயம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 46 சங்கங்களில் மொத்தம் 4200 அங்கத்தினர்கள்தான் இருந்தனர் அக்காலத்தில் உரம் விற்பனையை தம் கைக்குள் வைத்திருந்த வியாபாரிகள் ஓர் கட்டுப்பாடாக இருந்தனர். இவர்களில் சிலர் கூட்டுறவுச் சங்கங்களோடு தனித்த முறையில் தொழில் நடத்தினால் தமக்கு நன்மை உண்டு என்று கருதினார்கள். அதனால் வியாபாரிகளின் கட்டுப்பாடு குலைந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்குமுன் இருந்த விலையைவிட உரங்களின் விலை கால் மடங்கு குறைந்தது.

வெண்ணெய்ச் சாலைகள் உள்ள இடங்களில் விவசாயச் சாமான்கள் அந்த வெண்ணெய்ச் சாலைகள் மூலமே வாங்கப்பட்டன. அதனால் ஓர் விவசாயச் சங்கத்தின் அபிவிருத்தியை கணக்கிடுவதால் மட்டும் நாடு பூராவும் உள்ள அபிவிருத்தியைக் கணக்கிடமுடியாது. பல வேலைகளையும் ஒன்று சேர்ப்பதே சங்கங்களின் நோக்கமாய் இருக்கிறது. இது கைகூடும் இடங்களில் மிக் நன்மையாகவே முடியும். உதாரணமாய் ஓர் வெண்ணெய்ச் சாலையுடன்



அதன் யந்திர சக்தியால் ஓட்டப்பட்ட மா அரைக்கும் மில்லும், விதை, உரம் வாங்கும் தொழிலும், அங்கத்தினர்களுக்கு குடும்பத்திற்கு வேண்டிய பலசரக்கு ஸ்டோரும் சேர்ந்திருந்தால் மிக நலமே. இந்தக் காரணத்தால் பல இடங்களில் தனித்த விவசாயச் சங்கங்களுக்கு வேலை இல்லாது போயின. ஆரம்பத்தில் விவசாயச் சங்கங்கள் பொதுவாய் விதையும் உரமும் வாங்கி உபயோகப்படுத்தி விட்டு தூங்கிப் போவது வழக்கம். ஆகவே, அங்கத்தினர்கள் யாவரும் ஒருவருக்கொருவர் அடிக்கடி நெருங்கிப்பழகி பற்பல, புதிய துறைகளில் ஈடுபட்டு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலை செய்து கூட்டுறவு முறையின் விசேஷ நன்மையை அடைய சந்தர்ப்ப மில்லாது போயிற்று. இச்சங்கங்களைத் தோற்றுவித்த அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் இந்த சங்கங்களை அடிக்கடி வேறு முயற்சி எடுக்கும்படி தூண்டி விட்டார்கள். ஒரு வருஷத்தில் மந்தமாகவும் பயனற்றதாகவும் உள்ள சுமார் 23 சங்கங்கள் பதிவு ஜாப்தாவிலிருந்து விலக்கப்பட்டன. எனினும், ஏனைய சங்கங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்ய முற்படவில்லை. சாதாரணமாக இச்சங்கங்கள் மந்தமாக வேலை செய்த போதிலும்கூட சில நன்மைகள் ஏற்பட்டது. இவை நன்றாக வேலை செய்திருந்தால் இன்னும் அதிகமான நன்மை கிட்டி இருக்குமெனலாம். 1919-ம் ஆண்டில் சங்கங்களின் எண்ணிக்கை 350 ஆயிற்று. இவைகளுக்குள்ள சாதாரண வேலையுடன் அங்கத்தினர்களுக்கு வேண்டிய நாணய சௌகரியங்கள் செய்து கொடுக்கும் வேலையையும் சேர்த்து இந்த சங்கங்களுக்கு வருஷம் பூராவும் வேலை கொடுக்க முயலுகிறார்கள். 1981-ம் வருடம் வெக்ஸ் போர்ட் என்னுமிடத்திலுள்ள சங்கமொன்று "கதிர் அடிக்கும்" மெஷின் வாங்கி அங்கத்தினர்களுக்கு வாடகைக்கு விட ஆரம்பித்தது. அதுமுதல் இந்த முக்கியமான முன்னேற்ற வழியை பல சங்கங்கள் பின்பற்றத்தொடங்கின.

யுத்தத்தின் பிறகு அதிகமான நிலத்தை பயிராக்கவேண்டுமென்று பலமான கிளர்ச்சி நாடெங்கும் ஏற்பட்டது. பல கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் தங்கள் அங்கத்தினர்கள் உபயோகத்திற்காக பல விவசாயக் கருவிகளை வாங்க ஆரம்பித்தன. சென்ற நான்கு வருஷங்களுக்குள்ளாக விவசாயத்துறையில் பல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மேற்கு அயர்லாந்தில் மோட்டார் டிரேக்டர்கள், அறுப்பு அறுக்கும் யந்திரங்கள், கதிர் கட்டும் யந்திரம், உருளைக்கிழங்கு தோண்டி எடுக்கும் யந்திரம், முதலிய விலை உயர்ந்த விவசாய யந்திரங்களை பல சங்கங்கள் விலைக்கு வாங்கி தங்கள் அங்கத்தினர்களுக்கு வாடகைக்குக் கொடுக்கின்றன. பக்ஷபாதம், கக்ஷி விவகாரம் இன்றி சகலரும் முறைப்படி ஒற்றுமையாய் உபயோகிக்கிறார்கள். விவசாயத்திற்கு இவ்வித யந்திரங்களால் மிக நன்மையும், லாபமும் ஏற்படுவது கண்டு இவ்வாறு யந்திரங்கள் வாங்கி விவசாயம் செய்வதற்கென்றே பல புது விவசாயச் சங்கங்கள் தோன்றியுள்ளன. இவைகள் கருவிச் சங்கங்கள் என வழங்கப்படுகின்றன. இவைகள் அயர்லாந்தில் மிக முன்னேறலாம். விவசாய சங்கங்களின் வேறு சில முயற்சிகளும் கவனிக்கத்தக்கவை. சில சங்கங்கள் தங்களுடைய ஆதரவில் நூதன விவசாய முறைகளை சோதித்துப் பார்க்கும் ஸ்தலங்களை ஏற்படுத்தின. இங்கு பார்லி தானியம், உருளைக்கிழங்கு பயிர் செய்யும் முறைகள், உயர்ந்த உரம் எது என்பது ஆகியவற்றை சோதித்துப் பார்த்தார்கள். இந்த வேலையை தற்பொழுது விவசாய இலாக்கா எடுத்துக்கொண்டு விட்டது. வேறு சில சங்கங்கள் மொத்தமாக மேய்ச்சல் நிலம் குத்தகைக்கு எடுத்து அங்கத்தினர்களுக்குக் குத்தகைக்கு விட்டு, வந்த லாபத்தை அங்கத்தினர்களுக்கு விதித்துக் கொடுத்தன. இதன் மூலம் அங்கத்தினர்களுக்கு 100-க்கு 15 விகிதம் லாபம் கிடைத்தது. ஏனைய நாடுகளைப்போல் கூட்டுறவு இயக்கத்திற்கு ஆரம்பமுதல் அரசாங்கார் உதவி செய்திருந்தால் அவ்வியக்கம் இன்றுள்ளதைப் போல் மும்மடங்கு முன்னேற்ற மடைந்திருக்கும். வியாபாரிகள், அரசாங்கத்தார், ராஜீயவாதிகள் இவர்கள் அனைவரும் எதிர்த்தும் அயர்லாந்தில் கூட்டுறவு இயக்கம் தற்காலமுள்ளபடி முன்னேற்ற மடைந்திருப்பது யாவரும் வியக்கத்தக்கது.

1919-ம் வருடத்தில் 350 சங்கங்கள் இருந்தன. இவைகளில் மொத்தம் 50,332 அங்கத்

# சென்னை மாகாண கூட்டுறவு யூனியன்

சென்னை மாகாண கூட்டுறவு யூனியன் வருடாந்திர அறிக்கையின்படி 1933-௵ மே-௴ 31-௳ முதல் 1934-௵ ஜூன்-௴ 30-௳ வரை நடந்துள்ள வேலை விபரத்தின் ஓர் பகுதி பின்வருமாறு :—

1933-ம் ஆண்டில் 460 சங்கங்கள் அங்கத்தினர்களாக இருந்தன. 1934-ம் ஆண்டில் 470 சங்கங்களாக அதிகரித்தன. யூனியன் நிர்வாக போர்ட்டார் கூட்டம் 1933-௵ ஜூன்-௴ 17-௳ நடைபெற்றது. அதுகாலை மத்திய கூட்டுறவு சல்லூரியொன்று ஸ்தாபனம் செய்ய வேண்டியதின் அவசியத்தைப்பற்றி விவாதிக்கப்பட்டது. இது தவிர நிர்வாக சபைக்கூட்டம் நான்கு தடவை நடந்துள்ளது. 1933-௵ ஆகஸ்ட்-௴ 27-௳ நடந்த கூட்டத்தில் இந்திய சர்க்கார் லேபர் டிபார்ட்மெண்ட்டாரிடமிருந்து வந்த கடிதத்தில் கடனுக்குக் கைதி செய்தல், சிறைக்கு அனுப்புதல் என கண்டுள்ள விஷயத்தைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டது. அது குறித்து தலைவரால் தயாரிக்கப்பட்ட யதாஸ்து அங்கீகரிக்கப்பட்டது. 1933-௵ டிசம்பர்-௴ 17-௳ நடந்த நிர்வாக சபைக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களை மேம்பார்வை புரியும் யூனியன்களின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து விவாதித்த பின்னர் ஓர் முடிவுக்கு வரப்பட்டது. அதாவது, கிராமச் சங்கங்களை மேம்பார்வை புரிய யூனியன்கள் அவசியம் என்பதை ஒப்புக்கொண்டாலும், தேவைக்கு மேல் அவசியமில்லாததும், உபயோகமற்றதாகவுமுள்ள யூனியன்களை எடுத்துவிடலாம் என்பதாகும்.

## ஐக்கிய அயர்லாந்து

(11-ம் பக்கத் தொடர்ச்சி.).

தினர்கள். மொத்த வரவு சுமார் லெட்சத்து இருபத்தெட்டாயிரம் பவுன். இந்த சங்கங்களில் சிலவைகளில் உழும் யந்திரம், நிறுக்கும் யந்திரம், கதிர் அடிக்கும் யந்திரம் முதலியன உண்டு. உரம், விதை, உணவுப்பொருள்கள் முதலிய வியாபாரம் செய்கின்றன. கிருஷிகள் கையில் எப்பொழுதும் பணம் இராது. ஆகையால் அவர்களுக்கு முன்னதாகப் பொருள் கொடுத்து உதவி செய்யுமாறு அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் தூண்டுகின்றனர். குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருள்களையும், அங்கத்தினர்களுக்கு வாங்கிக்கொடுக்கும் சங்கங்கள் அதிகரித்து வருகின்றன. தங்களுக்கு விலைவாசிகள் லாபமாக வேண்டுமாயின் இன்னும் பல சங்கங்கள்கூடி பலவும் ஒன்று சேரவேண்டுமென்பதையும், அவை உணர்ந்திருக்கின்றன. மூன்று நான்கு யந்திரங்கள் வாங்குவதைவிட முற்பது நாற்பது சேர்த்து வாங்கினால் எவ்வளவு லாபம் அடையலாம். இதை எல்லாம் ஐக்கிய விவசாய அபிவிருத்தி சங்கத்தார் எடுத்துக் காட்டி வருகின்றனர்.



# இந்திய மாதரும் கூட்டுறவு இயக்கமும்

ஸ்ரீமதி அமலா முகார்ஜீ

[பீகார்—ஒரிசா மாதர் சங்கக் கமிட்டி அங்கத்தினர்; ராஞ்சி சிசு சம்ரக்ஷணை சங்க கௌரவக் காரியதரிசி.]

"இந்தியா உலகிலுள்ள ஏனைய நாடுகளைப் போன்று உன்னத பதவியை அடையவேண்டுமென விழைகிறது. இந்திய மாதர்களோ கல்வியற்றவர்களாகவும், திறமைக் குறைவானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்களைப் போன்று பல துறைகளிலும் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முற்போக்கான நிலையை அடைந்தாலொழிய இந்தியாவின் விருப்பம் நிறைவேறாது. இது மிகைபடக் கூறுவதாகாது." என இந்நாட்டிற்கு வந்துபோன இந்திய சீர்திருத்தக் குழுவினர் கூறி இருக்கின்றனர். அவர்கள் அபிப்ராயம் மிகவும் பொருத்தமானதாக இருப்பதுடன் கவனிக்கத்தக்கதுமாகும். நாட்டின் நானு பக்கங்களிலும் சங்கங்கள் பல ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மாதரின் கல்வி வளர்ச்சிக்கும், அறிவு விருத்திக்கும் அச்சங்கங்கள் பாடுபட்டு வருகின்றன. அகில இந்திய மாதர் சங்கம், பீகார் ஒரிசா மாதர் சங்கம், யௌவன கிருஸ்தவ மாதர் சங்கம் முதலிய ஸ்தாபனங்கள் மாதர் நலத்திற்காக வெகு நன்றாக வேலைசெய்து வருகின்றன. எனினும் எஞ்சி நிற்கும் வேலையோ மிக அதிகம். இது வரையில் நடந்துள்ள வேலைகளால் பயனடைந்திருக்கக் கூடியவர்கள் நகரங்களிலேயும் அவற்றின் அருகாமையிலேயும் வசிக்கக்கூடிய மத்திய நிலையிலுள்ள மாதர்களேயாவர். கிராமங்களில் வசிப்போர் ஒரு இம்மி அளவுகூட மாறுதல் அடைந்திருப்பதாகக் காணப்படவில்லை. அவர்களிடம் பிரசாரமெதுவும் நடைபெறவில்லை. அஞ்ஞானம், மூட நம்பிக்கை, வறுமை ஆகியன அவர்களிடம் குடிகொண்டிருக்கிறது. இவற்றினின்றும் விமோசனமடைய வழி எதுவும் கண்டபாடில்லை. நிர்வாகத் திறமையும், அன்றாட வாழ்க்கை நடத்தும் முறையும், தன் நம்பிக்கையும் அவர்களிடையே பரவச் செய்வது இன்றியமையாதது. நமது தலைவர்கள் மாதர்கள் பலதுறைகளிலும் உரிமைபெற வேண்டுமென முயற்சிக்கின்றனர். மாதரின் வாக்குரிமையை விரிவுப்படுத்த வேண்டுமென்றும் விரும்புகின்றனர். என்னே? இவர்கள் கனவு, அஸ்திவாரம் வலுவானதாக இருந்தாலல்லவோ கட்டிடம் நிலைத்து நிற்கும். அன்றேல் என்ன பயன். இவர்கள் முயற்சி எல்லாம் மணலின்மீது கட்டும் மாளிகை போன்றல்லவோ இருக்கிறது. கிராமங்களில் வசிக்கும் நமது சகோதரிகள் வெறும் நடைப்பிணங்களாக இருக்கிறார்களேயன்றி வேறல்ல அவர்களின் வாழ்க்கை நிலை செம்மைப்பட வேண்டும. பரந்த நோக்கமும், விசால புத்தியும் ஏற்படவேண்டும். இவை ஏற்பட்டாலொழிய மாதர் உரிமைக்கென போராடும் நமது சகோதரிகள் முயற்சி ஒருசமயம் வெற்றி பெற்றாலும் அவர்கள் வெற்றியால் பயன் எதுவும் சித்திக்காது. உரிமைகளை நாம் பெறலாம். ஆனால், அவ்வுரிமைகளைக் கையாளும் திறமை வேண்டும். கிடைக்கக்கூடிய உரிமைக்குத் தக்கபடி பொறுப்பு அதிகரிக்கிறது. நாம் நமது கடமையைத் திருப்திகரமாகச் செய்ய வேண்டியதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

இந்திய மாதரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவுள்ள சிக்கலான பிரசினைகள் பலவற்றையும் தீர்க்கக்கூடியது கூட்டுறவு இயக்கமாகும். இவ்வியக்கம் ஒன்றே மாதருக்கு உருப்படியான உதவி அளிக்கக்கூடியது. கூட்டுறவுக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்படும் ஸ்தாபனம் தர்ம சத்திரமாகாது. சுய உதவி, பரஸ்பர ஒத்தாசை என்ற நிரந்தரமான அஸ்திரவாரத்தின்மீதுதான் கூட்டுறவு ஸ்தாபனம் நிறுவப்படுகிறது. கூட்டுறவு ஸ்தாபனத்தில் மிகவும் பிரதானமாக விளங்குவது ஒத்துழைப்பு. இத்தகைய ஒத்துழைப்புக்கு அங்கத்தினர்கள்

பெரும் தியாகம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இவ்வித தியாகம் செய்யத்தக்க அரிய பயிற்சி அங்கத்தினர்களுக்கு ஏற்படவும், அவர்களை நாட்டின் சிறந்த பிரஜைகளாக விளங்கச்செய்யவும் அனுகூலமாக இருப்பது கூட்டுறவு ஸ்தாபனங்கள். எனவே, மாதர்களிடையே கூட்டுறவு இயக்கத்தைப் பரவசெய்ய வேண்டும். இதுசமயம் மாதர்கள் இருக்கும் பிற்போக்கான நிலையில் நமது வேலை தீவிரமாக நடைபெறுவது கடினம் ஆனால் ஒழுங்கான முறையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் நிறுவப்படின், அவை சரியாக கண் காணிக்கப்பட்டுவரின், நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் பெரும் பலனளிக்கும் என்பதில் ஐயமில்லை. அதன் பயனாக கிராம வாழ்க்கையிலேயே ஓர் பெரும் புரட்சி ஏற்படும். கூட்டுறவு இயக்கம் போதிக்கக்கூடிய சுய உதவி என்ற கொள்கை கூட்டுறவு ஸ்தாபனங்களை நிரந்தரமானதாகச் செய்கிறது. அங்கத்தினர்கள் தங்கள் கடமையைத் தவறாது செய்யத் தூண்டுகோலாக இருப்பது சுய உதவியேயாகும். இந்த சுய உதவி என்ற சிறந்த கொள்கையை அங்கத்தினர்கள் தங்களது தினசரி வாழ்க்கையில் அனுஷ்டிக்க நேரிடுகிறது.

சிறுமிகளும் தாய்மார்களும் போதிய கல்வி பெற வேண்டும்; அறிவு வளர்ச்சி பெற வேண்டும்; சுகாதாரவிதி தெரிதல்வேண்டும்; கற்பகாலத்தில் நடக்கும் விதம், சிசுபரிபாலனம் முதலியன உணரல் வேண்டும்; சிக்கன வாழ்க்கை நடத்தல், பொருள் விரயம் செய்யாதிருத்தல், அர்த்தமற்ற அனாவசியமானச் சடங்குகளில் கண்மூடித்தனமாகப் படாடோபச் செலவு செய்யாதிருத்தல் கற்க வேண்டும். ஓய்வு நேரங்களில் காலத்தை வீணாக்காமல் குடிசைத் தொழிலில் ஈடுபடவேண்டும். இவை யாவும் சித்திபெற சிறந்த மார்க்கம் மாதர்களை கூட்டுறவு முறையில் இணைப்பதேயாகும். பொதுநல வேலைகள் பல வகையில் நடைபெற்று வருகின்றன. கிராமப் பகுதிகளில் பெண் கல்விக்கென பாடசாலைகளை ஸ்தாபித்து நடத்த சர்க்கார் பொருளுதவி செய்கின்றனர். ஆனால் கல்வியில் பெண்களுக்கு ஓர் ஊக்கத்தை உண்டுபண்ண ஆங்காங்கு ஒரு ஸ்தாபனம் தேவையாக இருக்கிறது. தொத்து வியாதிகளை ஒழிக்கவும், வைசூரி, காலரா, பிளேக் போன்ற வியாதிகளைப் பரவவொட்டாது தடுக்கவும் சர்க்கார் ஏராளமான சிப்பந்திகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். கிராமாந்திரங்களிலுள்ள பெண்களும் ஆண்களும் இந்த உத்தியோகஸ்தர்களை உபயோகப்படுத்திக் கொண்டாலொழிய அதிகாரிகள் பிரயத்தனமெல்லாம் பயனற்றதாக முடியும். கிராமங்களில் சிசு மரணம் அதிகரித்து வருகிறது. இதற்குக் காரணம் தேர்ச்சியும் அனுபவமுமற்ற மருத்துவச்சிகள் இல்லாமையும், சுகாதார விதிப்படி தாய்மார்கள் நடக்காமலிருப்பதுமாகும். சிசு மரணத்தைக் குறைக்கவழி அனுபவசாலிகளான மருத்துவச்சிகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதேயாகும். சிறந்த மருத்துவச்சிகளின் தேவையை பெண்கள் உணரும்படிச் செய்யவேண்டும்.

மாதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு இக்காரியங்களிலெல்லாம் பங்கெடுத்துக்கொண்டு உழைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு கூட்டுறவு இயக்கம் விருத்தியாகும். ஆண்கள் பொறுப்பு குறையும். கூட்டுறவு முறையில் கிராமப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென இந்தியாவின் பல்வேறு பாகங்களிலுமுள்ள கூட்டுறவாளர்கள் ஏக முகமாக அபிப்ராயப்படுகின்றனர். அவர்களது எண்ணம் ஈடேற வேண்டுமானால் பெண்கள் ஒத்துழைப்பு வேண்டும். ராஞ்சி ஜில்லாவில் ஹேசல் என்ற கிராமத்திற்கு நாம் செல்ல நேர்ந்தபோது அங்கு நடந்த கூட்டத்தில் ஆண்கள் அதிகமாகக் கலந்து கொள்ளாததைக் கண்டோம். காரணம் யாதென விசாரித்ததில் பெண்கள் தங்கள் கணவன்மார்களைக் கூட்டத்திற்குச் செல்ல வேண்டாமெனத் தடுத்து விட்டதாகவும், கூட்டத்திற்குச் செல்வதை அவர்கள் வீண்காலப் போக்கென கருதுவதாகவும் அறிந்தோம். கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் சிலர் நாங்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் தங்கள் கருத்திற்கு மாறுபட்ட தங்கள் மனைவிமார்களின் மனதைத் திருப்பும்படி கேட்டுக் கொண்டனர். வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ளவும், காற்றோட்டம், வெளிச்சம் இருக்கும்படி ஜன்னல்கள் வைக்கவும் ஆண்கள் சம்மதிக்கின்றனர். ஆனால் பெண்களோ அதற்கு இடங்கொடுக்கிறார்களில்லை. குப்பை செத்தைகளை அடைத்துக்கொண்டு ஆபாசமாக வீட்டை



வைத்திருக்கிறார்கள். ஜன்னல் வைத்தால் குளிர்வாடை அடிக்குமென்றும், பிறர் பார்வை படுமென்றும் காற்றோட்டமில்லாத வாழ்க்கையையே விரும்புகின்றனர்.

வைசூரியைத் தடுக்க ஊசி போட்டுக்கொள்வதை பெண்கள் ஆக்ஷேபிக்கின்றனர். ஆண்கள் அவ்வளவு அதிகமாய் எதிர்க்கிறார்களில்லை. சென்ற ஆண்டில் இந்த கிராமத்தில் வைசூரி மிகக்கடுமையாக இருந்தபோது ஊசிபோடும் உத்தியோகஸ்தர்கள் மிகவும் அவதிப்பட்டார்கள். அவர்களை கிராம வாசிகள் துரத்தி அடித்தனர். நாங்கள் பெண்களுக்கு ஊசி போடுவதால் விளையும் நன்மைகளை எடுத்துச்சொன்னதில் அவர்கள் மனதில் சரியெனப்பட்டதும் ஊசி போட்டுக்கொள்ள இணங்கினர். ஒரு நாளில் கிராமத்திலுள்ளவர்களுக்கெல்லாம் ஊசி போட முடிந்தது. கல்யாணம், சடங்கு முதலியவைகளில் செலவு அதிகப்படுவதற்குக் காரணம் பெண்களே. அறியாமையாலும், போலி கௌரவத்தை நாடியும் அவர்கள் பிடிவாதம் காட்டுவதினால் வீண் செலவுகள் விசேஷ காலங்களில் அதிகரிக்கிறது. நாம் செய்யவேண்டிய சீர்திருத்த வேலைகளுக்கு இவை சில திருஷ்டாந்தங்களாகும்.

பெண்கள் தற்போதுள்ள கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை வெகு சொற்பமே. முகமூடி காரணத்தாலும் அஞ்ஞானத்தாலும் அவர்கள் ஊக்கமாக உழைக்க முன் வருகிறார்களில்லை. பெண்கள் சம்பந்தப்பட்ட பிரசினைகள் தனிப்பட்ட வகையாகும். அவற்றினைத்தீர்க்கும் வழியும் தனிப்பட்டதேயாகும்.

எனவே, மாதர்களை கூட்டுறவு முறையில் ஒன்றுதிரட்டவும், சமூதாய, பொருளாதார நிலையை விருத்தி செய்யவும் மாதர்கள் தனித்த ஸ்தாபனங்களை நிறுவுதல் வேண்டும்.

இந்தியாவிலும்கூட இத்துறையில் பல மாகாணங்களிலும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. பம்பாய் நகரில் மாதர்களால் நடத்தப்படும் இரண்டு கூட்டுறவு ஸ்டோர்கள் இருக்கின்றன. வங்காளத்தில் மாதர்களால் நடத்தப்படும் கைத்தொழில் சங்கங்கள் சில இருக்கின்றன. கல்கத்தாவில் கூட்டுறவு ஸ்டோர் ஒன்று இருக்கிறது. சரோஜ் நலினி சங்கம் மாதர் கூட்டுறவு இயக்கத்திற்கென மிகவும் பாடுபட்டு வருகிறது. பாஞ்சாலத்தில் சர்க்கார் சில மாதர்களை பிரசாரகர்களாக நியமித்திருக்கின்றனர். அவர்கள் வேலையின் பயனால் பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

அகில இந்திய மாதர் சங்கம் கூட்டுறவு மகாநாடுகள் பல கூட்டி இயக்கத்தை பரவச்செய்ய வேண்டும். பிரசாரக்கமிட்டிகள் மாகாணம் தோறும் நிறுவப்படவேண்டும். சர்க்கார் சம்பந்தமுள்ள கூட்டுறவு இலாக்காமூலம் தேவையான உதவியை நாடலாம். உத்தியோகஸ்தர்கள் உத்தியோகஸ்தரல்லாதார்கள் ஆகிய இருசாராருடைய ஒத்துழைப்பாலும் உதவியாலும் பல்வேறு மதத்தினரும், ஜாதியினருமாகவுள்ள மாதர்கள் பொதுவானதோர் மகத்தான ஸ்தாபனத்தை நிறுவலாம். அந்த ஸ்தாபனத்தின் மூலம் நாளாவட்டத்தில் தங்களுடைய செல்வ நிலையைப் பெருக்கிக் கொள்வதுடன், இந்தியாவின் அமைதிக்கும் க்ஷேமத்திற்கும் ஓர் உதவி செய்யலாம்.

14873

# கூட்டுறவு இயக்கமும் தேச முன்னேற்றமும்

## டென்மார்க்கு கற்பிக்கும் பாடம்

### இந்தியாவுக்கு நல்ல உதாரணம்

**கோ**வை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கின் கட்டிடம் ஆகஸ்ட்-மீ 27-உ இந்திய ஊழிய சங்கத்தலைவர் திரு. ஜி கெ. தேவதார் அவர்களால் திறக்கப்பட்டது. அதுகாலை அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் பின்வருமாறு:—நான் இதுசமயம் கூட்டுறவு இயக்க வேலையில் ஈடுபட்டுள்ள நண்பர்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். கூட்டு பாங்கு முறைக்கும், கூட்டுறவு பாங்கு முறைக்கும் உள்ள தாரதம்மியத்தை அவர்கள் நன்குணர வேண்டும். கூட்டு முறையைப்பற்றி நான் குறையொன்றும் கூறவிரும்பவில்லை. ஆனால், இவ்விரண்டினுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தின் நோக்கம் சேவை புரிவதே யன்றி லாபம் சம்பாதிப்பதல்ல.

#### இந்தியாவும், ஐரோப்பாவும்

இதுசமயம் நாம் என்றும் கண்டிராத பொருளாதார நெருக்கடியால் பீடிக்கப்பட்டிருக்கிறோம். சர்வதேச சங்கத்தாரால் வெளியிடப்படும் வருடாந்திர அறிக்கை வெளி வந்திருக்கிறது. அப்புத்தகத்தில் கூட்டுறவு இயக்கத்தைக் குறித்து ஓர் குறிப்பு எழுதப்பட்டிருக்கிறது. பொருளாதார மந்தத்தால் கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான வளர்ச்சி தடைபடவில்லை என காணப்பட்டுள்ளது. இதனைக் கண்ணுற்ற நான் ஆச்சரியமடைந்தேன். பொருளாதார மந்தத்திற்கு பல காரணங்கள் இருப்பினும், அக்காரணத்தினால் கூட்டுறவு இயக்கம் பாதிக்கப்படவில்லை என்பது மேற்கண்டவாறு குறிப்பு எழுதியவரின் கருத்தாக இருக்க முடியுமே யன்றி வேறொன்றுமல்ல. ஆனால், நம் நாட்டைப் பொறுத்தமட்டில் நிலைமை வேறு விதமாக இருக்கிறது. கூட்டுறவு இயக்கம் நம்நாட்டில் அகமும் புறமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. முதலாவதாக நாம் இன்னும் பூர்ணமான கூட்டுறவாளர்களாக வில்லை.

#### கூட்டும், கூட்டுறவும்

நம்மிடம் போதிய அளவு கூட்டுறவு உணர்ச்சி ஏற்படவில்லை. கூட்டுபாங்கு முறையின் வாடை நம்மைவிட்டு இன்னும் அகலவில்லை. அது கூட்டுறவாளருக்கு அழகன்று. கூட்டு முறையிலேயே பிரண்டு உருண்டுகொண்டு கூட்டுறவாளர்களாக விளங்குவதை நான் வெறுக்கிறேன். ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தின் பிரதானமான வேலை அங்கத்தினரின் செல்வநிலையை விருத்திசெய்ய பொருளுதவி புரிவதேயாகும். அவ்வுதவியை புரிவதே குறைந்த வட்டிக்குப் பணம் கொடுப்பதெனலாம். அவ்வாறு ஓர்முறை கடன் வாங்கியோர் தங்களது பங்குத்தொகை இருக்கிறது என்ற உரிமையின் பேரில் மீண்டும் மீண்டும் கடன் வாங்க முற்படுவதென்பது கூடாது. இது குறித்து எனது சுற்றுப்பிரயாண காலத்தில் பல பிரமுகர்களுடன் கலந்து பேசியதில் எனது அபிப்ராயத்தை ஒப்புக்கொள்ளுகின்றனர். அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட்டதும் பல நோக்கத்தைக் கொண்டு வேலைசெய்ய முற்படுகின்றனர். அதனால் இறுதியில் யாவும் பயனற்றதாக முடிகிறதே யன்றி நினைத்தபடி நடப்பதில்லை. இவை எல்லாம் அனுபவத்தின் மூலம் தெரியவருகிறது வேலை நடப்பிலுள்ள முறைபாடுகள் நிர்வாகத் திறமையின்மையில் கொண்டு வந்து விடவும், அதனால் பல ஸ்தாபனங்கள் கெடவும், அவ்வாறு ஓர் ஸ்தாபனம் கெடுவதானது கெட்ட அபிப்ராயத்தை உண்டு பண்ணவும் நேரிடுகிறது. இது ஓர் துரதிருஷ்டமென்றே சொல்லவேண்டும். எனவே, கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பார்வையிடுவோர் அவற்றினால் ஏற்படும் பிரயோஜனத்தை அளவிடுகிற

(17-ம் பக்கம் பார்க்க)



# அஷ்ட திக்கு

## தேவதார் சூடு

**கோ**வை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கு கட்டிடத்திறப்பு விழாவன்று திரு. தேவதார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவை பிரிதோரிடத்தில் காண்க. "கூட்டுறவின் தத்துவத்தை நம் நாட்டினர் இன்னும் பூர்ணமாக உணரவில்லை. நம்மவரிடம் உண்மையான கூட்டுறவு உணர்ச்சி இன்னும் ஏற்படவில்லை. கூட்டு முறையின் வாடை நம்மில் பலரைவிட்டு இன்னும் மாறவில்லை" என திரு. தேவதார் கூறியுள்ளார், கூட்டுமுறைக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும் உள்ள தாரதம்மியத்தை அவர் தெளிவு படுத்திக் காட்டியுள்ளார். இதன் மூலம் போலி ஆசாமிகளுக்கு திரு. தேவதார் நல்ல சூடு கொடுத்துள்ளார். கூட்டுறவு இயக்கத்தை கூட்டாக்கிவிட எங்கும் சுயநலக்காரர்கள் சூழ்ச்சி செய்வது உண்மையே. திரு. தேவதார் செய்துள்ள எச்சரிக்கை போற்றத்தக்கது.

## செட்டியார் கவலை

ராவ் பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்களைப்பற்றி கூட்டுறவாளருக்கு நாம் அதிகம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. மாகாண சுய ஆட்சி கிடைக்கும் பட்சத்தில், கூட்டுறவு இலாக்காவிற்கு தனி மந்திரிபதவி அளிக்கப்படும் பட்சத்தில், அப்பதவிக்கு பெருமை ஏற்படவேண்டுமானால், அதனை செட்டியாருக்கே அளிக்க நேரிடும். உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளர்கள் எவரும் திரு. செட்டியார் அவர்களிடம் போட்டி போடுவதற்கில்லை. கூட்டுறவு இயக்கத்தில் திரு. செட்டியார் ஓர் பழம் பண்டிதர். அவர் வெறும் வாய் வீச்சு வீரரல்ல. சொல்லுவதை செய்கையில் நடத்தும் திறமை வாய்ந்தவர். கூட்டுறவு இயக்கத்தின் நிலைமை குறித்து அவர் கவலைப்படுவாரானால் அதற்குப் போதிய காரணம் இல்லாதிருக்க முடியாது. கோவை

(16-ம் பக்கத் தொடர்ச்சி.)

விஷயத்தில் சற்று நிதானமாயும் பொறுமையாயும் இருக்கவேண்டும்.

#### தவணை கடந்த பாக்கி

தற்சமயம், 'கூட்டுறவுச் சங்கங்களில் தவணை கடந்த பாக்கி அதிகமாக இருக்கிறது. இது பெருகிக்கொண்டு போவது குறித்து நான் சிறிதும் அஞ்சவில்லை. இக்குறையைப்போக்க நாம் முதலாவதாக செய்யவேண்டியது கூட்டுறவுப் பிரசாரமாகும். இம்மாதிரியான தவணை கடந்த பாக்கிகள்' ஏற்படக்காரணம் குறைந்த வட்டிக்கு வாங்கப்படும் பணம் பொருள் உற்பத்தித் துறையில் உபயோகப்படுத்தப் படாமையே யாகும். படித்த வகுப்பார்களில் அநேகரும், சர்க்கார் உத்தியோகத்தில் இருப்போர் பலரும்கூட சேர்ந்தார்போல் ஆறு கூட்டுறவு பாங்குகளில் கடன் வாங்கியுள்ளதை அறிவேன். இம்மாதிரியான கெட்ட வழக்கத்திற்கு இடமே கொடுக்கக் கூடாது. கூடியவரையில் இவ்வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். சேமித்து வைத்தல் என்ற பழக்கம் நம்மிடம் இன்னும் பரவவே இல்லை. இப்பழக்கத்தை புகுத்த முற்படவேண்டும்.

#### தேச முன்னேற்றம்

நிற்க, முன்னேற்றத்திற்காக செய்யவேண்டிய வேலை கிராமாந்திரங்களிலே யாகும். கூட்டுறவு இயக்கத்தை கிராமங்களில் பரப்பும் வேலை செய்யப்படுமாகில் ஏனைய யாவும் பூர்த்தியாகும். இதற்கு டென்மார்க்கு தேசமே போதிய உதாரணமாகும். கூட்டுறவு இயக்கத்திற்கு தாழ்வும், வீழ்ச்சியும் பன்முறை ஏற்படினும் எனக்கு மாத்திரம் நாளுக்கு நாள் அவ்வியக்கத்திலுள்ள நம்பிக்கை அதிகரித்துக்கொண்டே வருகிறது. நம்நாடு நலம் பெற வேண்டுமானால், நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால், கூட்டுறவு இயக்கம் வெற்றி அடையவேண்டும். கூட்டுறவு இயக்கம் நசித்துப்போகுமாகில் இந்தியாவிற்கு என்றும் விமோசனமில்லை என்பது உறுதி.

ஜில்லா கூட்டுறவு பாங்கு கட்டிடத் திறப்புவிழா வன்று அவர் கூறியதாவது:—

"பொருளாதார மந்தம் எதிர்பாராதவாறு ஏற்பட்டது. அதனால் தவணை கடந்த பாக்கி அதிகரிக்கலாயிற்று. கூட்டுறவு இயக்கத்திற்கு ஒரு சோதனை காலம் வந்தது. சர்க்காரும் சரி, கூட்டுறவு ஸ்தாபனங்களை நிர்வாகம் செய்யும் உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவாளரும் சரி, கூட்டுறவு இயக்கத்திற்கு அந்திய காலம் கிட்டி விட்டதாக ஒரு சமயம் எண்ணியதும் உண்டு. ஆனால், தற்போது அந்நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் பொருளாதார நெருக்கடியால் பீடிக்கப்பட்டுள்ள கிருஷிகள் என்றும் உள்ளதைவிட இன்று துர்பாக்கியமான நிலையிலேயே இருக்கின்றனர். கிருஷிகளின் செல்வ நிலையை விருத்தி செய்ய இது வரை கூட்டுறவு இயக்கம் புரிந்த உதவியைக் காட்டிலும் இனி செய்ய வேண்டியது அதிகமாக இருக்கிறது. கூட்டுறவுச்சங்கங்கள் இது வரை கிருஷிகளுக்கு செய்ததெல்லாம், சாதாரண கடன் காரர்களாக உள்ளவர்களை பெரிய கடன் காரர்களாக ஆக்கியதேயாகும். அதனால் கிருஷிகள் கூட்டுறவுச் சங்கங்களை நாட்டிலுள்ள லேவாதேவிக் கடைகள் பலவற்றில் ஒன்றாகக் கருதுகின்றனரே யன்றி வேறல்ல."

திரு. செட்டியார் கூறியுள்ள வார்த்தைகள் சாமான்யமானவைகள் அல்ல. கூட்டுறவு இயக்கத்தின் நிலை குறித்து திரு. செட்டியார், அவர்களே இவ்வாறு கதறும் பக்ஷத்தில் அவருக்கு ஆறுதல் சொல்ல யாரால் முடியும். எனவே, அவர் தன்னைத்தானே ஆறுதல் செய்து கொள்ளக்கூடிய முறையில் கூறியுள்ள வார்த்தைகள் கூட்டுறவாளருக்கு ஓர் உபதேசமாகும். அதாவது:—"கிருஷிகளின் தேவை பூராவையும், கூட்டுறவு இயக்கம் பூர்த்தி செய்யவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்கள் கடன் கொடுக்கும் லேவாதேவிக்கடைகளாக விளங்காமல் அவர்களது வருமானத்தைப் பெருக்க வழி கண்டு உதவி புரியவேண்டும். கிருஷிகளின் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்றுக்கொடுக்கவும், குறைந்த செலவில் அதிகமான வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் விவசாயப் பயிற்சி அளிக்கவும், குடிசைத் தொழில்களை விருத்தி செய்யவும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் முன் வர வேண்டும்."

## இந்திய மாதர் வீரம்

இந்திய மாதரைப் பற்றி மிகத் தாழ்மையான அபிப்பிராயம் இருந்து வருகிறது. அவர்கள் வெறும் பிள்ளைபெறும் யந்திரங்களேயன்றி நாட்டின் செல்வ விருத்திக்கான துறைகளில் பாடுபடக்கூடியவர்களல்லவென கூறப்படுகிறது. இது பெருந்தவறு. இது குறித்து ஸ்ரீமதி, ரோஹிணி கூறும் வார்த்தைகள் பொன்னே போல் போற்றத்தக்கன. ஸ்ரீமதி ரோஹிணி கூறுவதாவது:—

"இந்திய மாதர்கள் நாணம் நிறைந்தவர்கள் என்றும், வெளி வாழ்க்கைக்கு அருகதை அற்றவர்களென்றும், குடும்ப வேலைக்குத்தான் லாயக்கானவர்களென்றும் உலகமெங்கும் ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது. கிராமத்தில் வசிக்கும் மாதர்களை எடுத்துக் கொள்வோம். அவர்கள் யாவரும் இந்திய மாதர்கள் தானே! கிராமங்களில் சென்று பார்த்தால் நாள் பூராவும் அவர்கள் வேலைசெய்வது தெரியவரும். சிலர் ரஸ்தா ஓரங்களில் கல் உடைக்கின்றனர். முகமுழுதும் தூசி படியவும், நெற்றி வியர்வை நிலத்தில் விழவும், பகல் முழுதும் செம்மட்டியும் கையுமாகவே அவர்கள் இருக்கிறார்கள். சிலர் நெல் வயல்களில் அறுப்பு அறுக்கின்றனர். சூரிய அஸ்தமான வேளையில் நெல்லை சுமந்து கொண்டு வீடு திரும்புகின்றனர். அவர்களை அணுகி கிடைத்த வருமானம் என்ன என்று கேட்டால் மூன்று அணா என்கின்றனர். நாள் பூராவும் எரிக்கிற வெய்யலில் வேலை செய்து மூன்று அணாவை கூலியாகப்பெற்று ஜீவனம் செய்யும் அவர்களை வீர மாதர்கள் என அழைப்பதைத் தவிர வேறு என்னென்பது. மேலும், சில இடங்களில் மாதர்கள் கல்லையும், மண்ணையும் சுமந்து செல்லுகின்றனர். ஒரு நாளை ஜீவனத்திற்காக மைல் கணக்காக நடந்து பாடுபடுவோரும் உண்டு.

ஏனைய நாடுகளில் மல்யுத்தம்புரிவதில் தேர்ச்சி பெற்ற பெண்களைப் பற்றி பிரமாதமாக விளம்பரம் செய்யப்படுவதின்மூலம் அறிகிறோம். உலக



மெங்கும் அவர்களின் பெயர் அடிபடுகிறது. ஆனால், ஏழை இந்திய மாதர்களைப்பற்றி எவரும் கவனிப்பாரில்லை. அவர்கள் தினந்தோறும் எவராலும் இயலாத சிரமமான வேலையைச் செய்யவில்லையா? இந்திய மாதருக்கும் ஏனைய தேச மாதருக்கும் உள்ள வித்தியாசம் இதுவே இந்திய மாதர் தனது ஜீவனத்திற்காக உழைக்கின்றனர். உழைப்பைத் தமது கடமையாகக் கருதுகின்றனர். அதன் மூலம் பெருமை அடையவோ அல்லது பொருள் திரட்டவோ நினைக்கிறார்களன்று. சாந்த சொரூபமும், அன்பின் உறைவிடமும், பொறுமையின் குன்றமுமாக விளங்குவோர் கிராமத்தில் வசிக்கும் இந்திய மாதர்களே."

## மகிழ்ச்சி அடைகிறோம்

ராவ் பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் உள்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டது குறித்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற சில மாதங்களுக்குமுன் பிரபல கூட்டுறவாளரான சர். கெ. வி. ரெட்டி அவர்கள் சட்ட மெம்பராக நியமிக்கப்பட்டதும், காலியான உள்நாட்டு மந்திரி ஸ்தானத்திற்கு மற்றும் ஓர் கூட்டுறவாளர் நியமிக்கப்பட்டதும் கண்டு கூட்டுறவாளர் பெருமை அடையாதிருக்க முடியாது. பொறுப்பான பதவிகளை வகிக்க கூட்டுறவாளர் தகுதியுடையவர்கள் என்பதற்கு இது ஓர் சான்றாகும். சென்னை அரசாங்கத்தார் கூட்டுறவாளரின் திறமையை உணர்ந்து பொறுப்பு வாய்ந்த பதவிகள் அளிப்பதை நாம் பாராட்டாதிருக்க முடியாது. இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தை புகுத்த வழிகாட்டியாக இருந்தது சென்னை அரசாங்கமே யாகும். இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் வேரூன்றி இருப்பதில் முதன்மையான பாகம் சென்னை மாகாணமே யாகும். இந்தியாவில் கூட்டுறவாளருக்கு உயர்ந்த பதவிகளை அளித்து அவர்களைப் பெருமைப்படுத்தியதும் சென்னையே யாகும். இது வரையில் சென்னை அரசாங்கத்தைப்பின்றி ஏனைய மாகாண சர்க்கார் நடந்து கொண்டது போல் எதிர்காலத்திலும் நடப்பார்களென்றும், கூட்டுறவாளரை கௌரவிப்பார்களென்றும் எதிர்பார்க்கிறோம்.

நிற்க, ராவ் பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் அவர்கள் தஞ்சை ஜில்லாவில் பிரபல மிராசுதாராக உள்ளவர். சுகாதார இலாக்கா டிப்டி டைரக்டராக இருந்து ஓய்வு எடுத்துக்கொண்டுள்ள திரு. திரிச்செல்வம் ஐ. எம். எஸ்., அவர்களின் சகோதரராவர். திரு. பன்னீர் செல்வம் அவர்கள் செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, சகலருக்கும் செல்வமாக விளங்கலானார். தஞ்சையில் திரு. செல்வம் பாரிஸ்டராக வாழ்க்கையை ஆரம்பித்து பப்ளிக் பிராசிகியூட்டர் ஆகலானார். திரு. செல்வம் ஸ்தல ஸ்தாபனங்களில் தனது கவனத்தைச் செலுத்த முற்படவே, முதலில் நகர சபைத் தலைவராகவும், பின்னர் ஜில்லா போர்ட் தலைவராகவும், ஜில்லா கல்விக் கழகத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூட்டுறவு இயக்கம் அவரைப்பற்றிப் பிடிக்கவே தஞ்சை மத்திய கூட்டுறவு பாங்கின் தலைவராகவும், தஞ்சை கூட்டுறவு பெடரேஷன் நிர்வாக சபை அங்கத்தினராகவும் பதவி வகிக்கலானார். திரு. செல்வம் எப்பதவி வகிப்பினும், அப்பதவிக்கே தனிப்பெருமை உண்டாகும் முறையில் அவர் நிர்வாகம் புரிந்தது எவரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாத உண்மையாகும். சட்டசபைப் பிரவேசம் அவரை பிரகாசிக்கச் செய்ததெனலாம். தஞ்சை ஜில்லாவில் அவர் செய்துள்ள சேவையும், சட்ட சபையில் அவர் காட்டிய திறமையும், அவரை வட்ட மேஜைக்குக் கொண்டுபோய் விட்டதுடன் நில்லாது உள்நாட்டு மந்திரியாகச் செய்ததென்போமாகில் அது மிகைபடக்கூறுவதாகாது. திரு. செல்வம் சிக்கனமாக வாழ்வு நடத்துபவர்; போலிப் பெருமைக்கும், டாம்பீக வாழ்விற்கும் ஆசைப்பட்டு, வீணான வகையில், பயனற்ற துறையில் செலவுகள் செய்ய விரும்பாதவர். ஜில்லா போர்ட் தலைவர் பதவி நீங்கவே அவர் தனது மோட்டாரை விற்றதும், பப்ளிக் பிராசிகியூட்டராக இருந்தும் ஒற்றை மாட்டு வண்டியில் கோர்ட்டுக்குச் சென்று வந்ததும், இதற்கு ஓர் உதாரணமாகும். உள்நாட்டு மந்திரியாக அவர் நியமிக்கப்பட்ட பின்னரும் கூட, அப் பதவி ஏற்பதற்கு மூன்று தினங்கள் முன் வரையில் வீரசிங்கம்பட்டி கலக வழக்கில் பப்ளிக் பிராசிகியூட்டராக ஆஜராகி வழக்கை திறம்பட நடத்தி

வந்தது அவர் தமது கடமையைச் செய்வதில் எவ்வளவு தூரம் கருத்துள்ளவர் என்பதைக் காட்டுகிறது. உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் தன்மையை திரு. செல்வம் அறியார், தன்னால் இயன்ற, தனது சக்திக்கு உட்பட்ட, தனது அதிகார வரம்பு கடவாத காரியங்களில் திரு. செல்வம் எவரது எதிர்ப்புக்கும், முட்டுக்கட்டைக்கும், மிரட்டலுக்கும் அஞ்சாது தான் நினைத்த காரியத்தை சாதிக்கும் தீரர். எனவே, திரு. செல்வம். அவர்கள் உள்நாட்டு மந்திரியானதால் அவர் பெருமை அடைந்தாரென்பதைக் காட்டிலும் அப்பதவிக்கு இதுவரையில் இல்லாத விசேஷ பெருமை ஏற்பட்டுள்ளதெனக் கூற விரும்புகிறோம்.


## வரதராஜரே வருக!

நமது ஜில்லா கூட்டுறவு இலாக்கா டிப்டி ரிஜிஸ்திராராக இருந்த திரு. சாமுவேல் பிள்ளை அவர்கள் உடம்பு சுகவீனம் காரணமாக நீண்ட நாள் ஓய்வு எடுத்துக்கொண்டமையால் அவரது ஸ்தானம் காலியாக நேரிட்டது. அன்பர் சாமுவேல்பிள்ளை அவர்கள் திருச்சியில் இருக்க நேர்ந்தது சொற்ப மாதங்களேயாயினும், அவர் செய்துள்ள நன்மைகள் அளவிடற்கரியது. திரு. சாமுவேல் பிள்ளை அவர்கள் தேக சுகம் பெற்று கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு மீண்டும் சேவை புரிய வேண்டுமென விரும்புகிறோம்.

நிற்க, அவரது ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள திரு. வி. வரதராஜ முதலியார் அவர்களை மனமுவந்து வரவேற்கிறோம். திரு. முதலியார் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சென்ற 15 ஆண்டுகளாக உத்தியோக தோரணையில் சம்பந்தமுள்ளவர். மதுரையில் சப் டிப்டி ரிஜிஸ்திராராகவும், கோவை ஜில்லா கூட்டுறவு பாங்கு காரியதரிசியாகவும், இருந்துள்ளவர். தஞ்சையில் டிப்டி ரிஜிஸ்திராராகவும், திருச்சிக்கு ஆக்டிங் டிப்டி ரிஜிஸ்திராராகவும் இருந்த காலத்தில் திருச்சி ஜில்லா கூட்டுறவு பாங்கு நிர்வாகசபை தேர்தல் தகராறு சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கில் அவர் அளித்துள்ள தீர்ப்பு அவரது சாதுர்யத்திற்கு போதிய சான்றாகும். பின்னர், அவர் தற்காலீக டிப்டி ரிஜிஸ்திரார் பதவியிலிருந்து நிரந்தரமான டிப்டி ரிஜிஸ்திராராக நியமனஞ் செய்யப்படவே, அவர் பதவி ஏற்க நேர்ந்த இக்காலம் திருச்சி ஜில்லாவில் கூட்டுறவு இயக்கத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள சமயமெனலாம். இக்கொந்தளிப்பைத் தணிக்கும் திறமை திரு. முதலியாருக்கு உண்டு என்று நம்புகிறோம்.

உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளரைத் தீண்டத்தகாதவராக்கருதும் டிப்டி ரிஜிஸ்திரார்கள் சிலருண்டு; சளசள—லொடலொட என்று வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல் கத்துவோரும் பலருண்டு. தமது அதிகார எல்லையை அறியாது ஆடுவோரும் இல்லாமலில்லை. தமது சிப்பந்திகளை அதட்டுவதும், மிரட்டுவதும், அடித்துப் பேசுவதுமே தமக்குக் கிடைத்த பதவியின் பெருமை என எண்ணிக்கொண்டிருப்போரும் எண்ணிலர். ஆனால் திரு. முதலியார் உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளருக்கு உத்தம தோழராக விளங்குவார். மெல்ல மெல்லப் பேசுவார். ஆனால் சட்டென்று கேள்வி கேட்டால் பட்டென்று பதிலளிப்பார். "ஒன்றே செய்க! அதுவும் நன்றே செய்க." என்ற முதியோர் மொழியைப் பின்பற்றி அவர்தான் பெற்ற அதிகாரத்தை துஷ்பிரயோகஞ் செய்யாதவரும் தன்னைப்போல் பிறரையும் மதிக்கும் உள்ளத்தை உடையவருமாவர். இத்தகைய ஒரு நல்லார் நமது ஜில்லாவிற்கு டிப்டி ரிஜிஸ்திராராகக் கிடைத்ததற்கு நாம் பெருமை அடையாதிருக்க முடியாது. திரு. ஆஸ்டின் அவர்கள் ரிஜிஸ்திராராக நியமிக்கப்பட்டதும், திரு. முதலியார் அவர்களை நாம் டிப்டி ரிஜிஸ்திராராகக் கிடைக்கப் பெற்றதும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் உள்ளதெனலாம். திரு. முதலியார் அவர்களது வருகையால் திருச்சி ஜில்லா கூட்டுறவாளர் புத்துயிர் பெறுவார்களென எதிர் பார்க்கிறோம்.

(4873)


We are Gold Medalists in all the Exhibitions from 1916 onwards.




சஞ்சீவி குழந்தைகளுக்கு சஞ்சீவி

குரு மருந்துகளை வெல்ல வேறு மருந்து கிடையாது.

அனுபோகத்தில் காணலாம்.




குரு மருந்துசாலை, திருச்சிராப்பள்ளி.

பதிவு எண் : எம். 3126.



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

இம்மருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்

(2) குரு கஸ்தூரி காரமாத்திரை

(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.

(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது

(5) குரு பாலர் டாணிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி

(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது

(7) குரு ஜீமா களிம்பு—சகல கரப்பான்களுக்கும்

(8) சகலரண களிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு

(9) வயிற்றுக் கடுப்பு மருந்து

(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.

(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு

(12) கெற்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☞ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் ஏ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.